வாக்யத்தைவிட மேலானது. மஹா வாக்யத்தில் எல்லோருக்கும் அதிகாரமில்லை. ஸ்ரீராமமந்த்ர ஜபத்திலோ எல்லோரும் அதிகாரிகளாகையாலும் இது மேலானது. இது ப்ரணவரூபமாகையால் மோக்ஷத்தில் விருப்பமுள்ளவர்கள், வைராக்யமடைந்தவர்கள், ஸன்யாஸிகள் முதலியவர்களால் த்யானஞ் செய்யக்கூடியது. ஆகையால் இந்த மந்த்ரத்தின் அர்த்தத்தை நன்றாய்த் தெரிந்துகொண்டவன் ஜீவன் முக்தனாகிறானென்பதில் ஸந்தேஹமில்லை.''—(ராமரஹஸ்யோபநிஷத்.)

ராமாயண ரஹஸ்யார்த்தம். vi.

“ அகாரத்திலிருந்து ப்ரஹ்மா உண்டானார்; இவருக்கு ஜாம்பவான் என்று பெயர். உபேந்த்ரன் உகாரத்திலிருந்து உண்டானவர். மகாரத்திலிருந்து உண்டானவர் பரமசிவன். இவரே ஹனுமான். சக்ர ராஜாவான பிந்துவே சத்ருக்னர். நாதரூபமான சங்கமே பரதன். கலாபுருஷனாகிய ஆதிசேஷனே லக்ஷ்மணன். கலைக்குமேலான சித்ஸ்வரூபமுள்ளவள் ஸீதையென்று சொல்லப்படுகிறாள். அதற்கும் மேலான பரமபுருஷனே ஸ்ரீராமன். இவரே நித்யர், சுத்தர், புத்தர், முக்தர், ஸத்யஸ்வரூபி. நாசமில்லாதவர், ஈடற்றவர், பரிபூர்ணமாயிருப்பவர். பரப்ரஹ்மஸ்வரூபி.''—(தாராஸாரோபநிஷத்.)

ராமாயண ரஹஸ்யார்த்தம். vii.

ஸீதையென்பவள் மூலப்ரக்ருதி. ஸகாரம், ஈகாரம், தகாரம், இந்த மூன்று அக்ஷரங்களுள்ள ஸீதா வென்ற பதத்தின் அர்த்தம் மாயையே. இவள் அவ்யக்த ரூபமுள்ளவளானாலும் வ்யக்தஸ்வரூபத்தையும் சிலவேளை யடைகிறாள். அத்யயனம் செய்யும்போது சப்தப்ரஹ்ம ரூபமாய் ப்ரகாசிப்பது இவளுடைய முதலாவது ரூபம். கலப்பையின் முனையில் உண்டாய், ஜனக மஹாராஜனுக்குப் பெண்ணாகப் பிறந்து பூமியில் ப்ரகாசிப்பது இரண்டாவது ரூபம். அவ்யக்தரூபமாயிருப்பது மூன்றாவது ரூபம்.

“ இவள் ஸ்வாதந்த்ர்யமில்லாதவளானாலும், ஸ்ரீராமனுடைய ஸன்னிதான விசேஷத்தால் ஸகல ஜகத்திற்கும் ஸந்தோஷத்தைச் செய்கிறாள். எல்லாவற்றையும் உண்டுபண்ணுவது, காப்பாற்றுவது, ஸம்ஹரிப்பது ஆகிய மூன்று கார்யங்களையும் செய்பவள். எட்டுவித ஐச்வர்யமுள்ளவளான ஸீதை மூலப்ரக்ருதியென்று சொல்லப்படுகிறாள். இவள் ப்ரணவஸ்வரூபியாகையால்

ப்ரகிருதியென்றும் ப்ரஹ்மநிஷ்டர்கள் சொல்லுகிறார்கள்."— (சௌனகீயம்.)

இவள் ப்ரகிருதி, வேதஸ்வரூபி, ஸகல தேவஸ்வரூபி, ஸகல கீர்த்திஸ்வரூபி, ஸகல லோகஸ்வரூபி, ஸகலஸ்வரூபி, ஸகல தர்மஸ்வரூபி, எல்லாவற்றிற்கும் ஆதாரமாகிய கார்ய காரணஸ்வரூபி. இவள் ஸ்ரீமஹாவிஷ்ணுவிற்குப் பின்னரூபமாயும் அபின்னரூபமாயு மிருக்கிறாள். சேதனரூபமாயும் அசேதனரூபமாயும், குணங்கள், செய்கைகள் இவைகளின் பேதத்தால் தேவர்கள், மஹர்ஷிகள், மனிதர்கள், அஸுரர்கள், ராக்ஷஸர்கள், பூதங்கள், ப்ரேதங்கள், பிசாசங்கள் முதலியவைகளின் ஸ்வரூபமாயும், ஐந்து பூதங்கள், இந்த்ரியங்கள், மனஸ், ப்ராணன் இவைகளின் ஸ்வரூபமாயு மிருக்கிறாள். இவள் இச்சாசக்தி, க்ரியாசக்தி, ஸாக்ஷாத்சக்தியென்று மூன்றுவகைப்பட்டவள். இச்சாசக்தி ஸ்ரீதேவி, பூதேவி, நீளாதேவி என்று மூன்றுவகையாகச் சொல்லப்படும்.

ஸ்ரீதேவி பத்ரரூபியாயும், ப்ரபாவரூபியாயும், சந்த்ரன், ஸூர்யன், அக்னி ஸ்வரூபியாயு மிருக்கிறாள். சந்த்ரரூபியாயிருப்பவள் ஓஷதிகளுக்கு அதிபதி. கல்பவிருக்ஷம், புஷ்பங்கள், பழங்கள், கொடிகள், செடிகள், பசிலைகள், அமிருதம் என்றவைகளுடைய ரூபமாயிருந்து தேவர்களுக்குத்திருப்தியை யுண்டு பண்ணுகிறாள்.

ஸூர்யரூபியாய அன்னத்தை விருத்தி செய்து தேவர்களையும், புல் முதலியவைகளை விருத்திசெய்து பசுக்களையும், ஸகல லோகங்களையும் ப்ரகாசிக்கச் செய்து அந்தந்த ஜீவராசிகளையும் திருப்தி செய்கிறாள். நிமிஷம், விநாடி, நாழிகை, பகல், ராத்ரி, நாள், பக்ஷம், மாஸம், ருது, அயனம், வர்ஷம் என்ற கணக்கின்படி நூறு வர்ஷங்களை மனிதர்களுக்குப் பரமாயுஸாக ஏற்படுத்தியும், ஜகத்சக்ரத்தையும், நிமிஷம் முதல் பரார்த்தம் வரையில், கணக்கிடப்பட்ட காலசக்ரத்தையும் நடத்தி வருபவள்.

அக்னிரூபியாய் ப்ராணிகளுக்குப் பசி, தாஹம் என்றவைகளாயும், தேவர்களுக்கு முகமாயும், காட்டிலிருக்கும் ஓஷதிகளுக்குச் சீதம (குளிர்ச்சி), உஷ்ணம் (சூடு) என்ற ரூபமாகவும், கட்டைகளில உள்ளும் புறமும் நித்யரூபியாயும், அனித்யரூபியாயுமிருக்கிறாள். இம்மாதிரி ஸ்ரீதேவியானவள் பகவானுடைய ஸங்கல்பத்திற்குத்தக்கபடி உலகத்தைக் காப்பாற்

றும்பொருட்டுச் சரீரமெடுத்து, ஸ்ரீயென்றும், லக்ஷ்மீயென்றும் திவ்யநாமத்தை வஹிக்கிருள்.

பூதேவி ஏழுத்வீபங்கள், ஏழு ஸமுத்ரங்களுள்ள 14 லோகங்களுக்கு ஆதாரமாயும் ஆதேயமாகவும், ப்ரணவரூபியாயுமிருககிருள்.

நீளாதேவி, ஸகல ப்ராணிகளையும், ஸகல ஓஷதிகளையும் போஷிப்பதற்கு மேகம் முதலிய பல ரூபங்களைத் தரிப்பவள். எல்லா லோகங்களுக்கும் கீழே ஜலரூபியாயும மண்டூக (தவளை) ரூபியாயு மிருக்கிருள்.

மஹாவிஷ்ணுவின் முகத்திலிருந்து நாதம் உண்டாகிறது. அதிலிருந்து பிந்துவும், அதிலிருந்து ஓங்காரமும் (ப்ரணவம்), அதிலிருநது கர்மத்தையும் ஞானத்தையு முபதேசிக்கும் அநேக சாகைகளுள்ள வேதபர்வதமும் உண்டாகின்றன. அதினுல் அறியப்படும ப்ரஹ்மஸ்வரூபமே க்ரியாசக்தி.

நினைததமாத்ரததில பரகாசிககக்கூடியதும், நிகரஹம், அநுக்ரஹம், தேஜஸ், சாந்திகளின் ஸ்வரூபமாயும், வ்யக்தரூபமாயும, அவ்யக்தரூபமாயும், அவயவங்கள், முகம, நிறம் முதலியவைகளில் ஒரேமாதிரியாயில்லாத அநேக ரூபமுள்ளதும், எப்பொழுதும் பகவானை விடடுப் பிரியாததும், ஸிருஷ்டி, பரிபாலனம், ஸம்ஹாரம், திரோதானம் முதலிய ஸாவஸாமர்தயமுள்ளதுமான பகவானுடைய சக்தியே ஸாக்ஷாத்சக்தியெனப்படுகிறது.

ப்ரளயகாலத்தில இச்சாசக்தியானது இளைப்பாறுவதறகாகப் பகவானுடைய மாரபில் வலது பாகத்தில் ஸ்ரீவத்ஸமென்ற மறுவாயிருக்கிறது. இதுவே யோகசக்தி. போகசக்தியென்பது, கலபவிருக்ஷம், காமதேனு, சிந்தாமணி, சங்கம் முதலிய ஒன்பது நிதிகளையும் ஆச்ரயிததிருப்பது.

இது, பலத்தை விரும்பியாவது, பலத்தை விரும்பாமலாவது பகவானையுபாஸிபபவர்களுக்கும்; நித்யநைமித்திககர்மங்களாலும், யமம், நியமம், ஆஸனம், ப்ராணுயாமம், ப்ரத்யாஹாரம், த்யானம், தாரணை, ஸமாதிகளாலும், பகவானைப் பூஜிப்பதற்காக அவருடைய விக்ரஹங்களைச் செய்து அவைகளுக்கு ஆலயங் கட்டுவது முதலிய பகவதகைங்கர்யமான ஸத்கார்யஞ் செய்பவர்களுக்கும் ஸாதனமாயிருக்கிறது.

வீரசக்தி பின்வருமாறு விளங்குகிறது. "நான்கு கைகளுடன் கல்பகவிருக்ஷத்தின் கீழ் திவ்யமான ரத்னஸிம்ஹாஸனத்தில் உட்கார்ந்து, நாலுபக்கமும் யானைகள் ரத்னக்குடங்களால் அபி

ருதாபிஷேகம் செய்ய; ஸகல ஆபரணங்களால் அலங்கரிக்கப் பட்ட திவ்யமங்களசரீரத்துடன் எல்லா தேவர்களும், ப்ரஹ்மா வும், வேதங்களும் கொண்டாட; அணிமை முதலிய எட்டு விதமான ஐச்வர்யங்கள் பக்கத்தில் நிற்க; ஜயா முதலிய அப் ஸரஸ்த்ரீகள் உபசாரம் செய்ய; சந்த்ர ஸூர்யர்களான தீபங் கள் இருபக்கமும் ப்ரகாசிக்கத் தும்புரு நாரதர் கானம் செய்ய; பூர்ணிமா, ஸினீவாலீ, அமாவாஸ்யா குடைபிடிக்க; ஹ்லாதினீ, மாயா, சாமரம்போட; ஸ்வாஹா, ஸ்வதா, விசிறிபோடப் பத்மா ஸனத்திலிருந்து எல்லா கார்யங்களையும் நடத்தி வருகிறாள்.'' —(ஸீதோபநிஷத்.)

ராமாயண ரஹஸ்யார்த்தம். viii.

ராமாயணமென்னும் மரத்திற்கு (லோகத்திற்கு உபகாரமா யிருப்பதால் மரத்தை உபமானமாகச் சொல்லப்பட்டது) காயத்ரீ மஹாமந்த்ரமே விதை; ராமரக்ஷாமந்த்ரமே முளை; வேதங் களே வேர்கள்; மோக்ஷமே பழம்.

வேதங்களுக்குத் தாயான காயத்ரியே எல்லாவற்றிற்கும் மூலம். இது மூன்று பாதங்களுள்ளது. ப்ரஹ்மாண்டமாகிற விருக்ஷத்தினுற்பத்திக்குக் காரணமாயிருப்பவருடைய ரூபத்தை மோக்ஷத்தில் விருப்பமுள்ளவர்கள், ப்ரஹ்மாண்டங்களடங்கிய ஜகத்தைக் கார்யரூபமாயும், ப்ரஹ்மத்தைக் காரண ரூபமாக ஸத்யமென்றும் த்யானஞ் செய்யவேண்டும் என்பது முதல் பாதத்தின் அர்த்தம். அதாவது, கார்யமாகிய ப்ரபஞ்சத்தைப் பரமாத்மாவிடம் ஆரோபித்து அவரைக் காரணமாக நினைக்க வேண்டுமென்பதால அதை நிவர்த்தித்து, ப்ரஹ்மத்தினுடைய ப்ரபஞ்சஸம்பந்தமில்லாத பாரமார்த்திகமான முதலாவது ஸ்வ ரூபம் விவரிக்கப்பட்டது.

"எந்த ஸுவர்ணமயமான புருஷன் ஸூர்யமண்டலத்தின் நடுவில் காணப்படுகிறானோ'' என்ற ச்ருதிப்படி ஸூர்யமண்ட லத்தின் நடுவிலிருக்கும் நாராயணனென்று மேற்சொல்லிய பர மாத்மாவின் தேஜோ ரூபமாய் உபாஸிக்கப்படும் மாயாவிரூபம் சொல்லப்பட்டிருக்கிறது. மேலும், "ப்ரஹ்மாண்டத்தின் நடு வில் அநேக அவதாரங்களைச் செய்து விளையாடும் ராமன், கிருஷ்ணன் என்ற தேஜஸை த்யானிக்கிறேன்'' என்பது இரண் டாவது பாதத்தின் அர்த்தம். இதே இரண்டாவதான உபாஸனா ரூபம். இதில் முதல் பாதத்தால் காட்டப்பட்ட ப்ரஹ்மஸ்வ ரூபத்தையடைவதற்கு ஸமீபித்த வழியாகிய உபாஸனைகான்

டத்தின் அர்த்தமாகிய இந்தத்யானம் சொல்லப்பட்டிருக்கிறது.

"நம்முடைய புத்தியை எவர் ஏவுகிறுரோ" என்றது மூன்ருவது பாதத்தின் அர்த்தம். இதனுல் வெளியில் ப்ரவர்த்திக்கும் புத்தியை அந்தர்முகமாகச் செய்யவும் ஸமர்த்தரென்று தெரிய வருகிறது. இது பரமாத்மாவை யடைவதற்குத் தூரமார்க்கமாகிய கர்மகாண்டத்தின் அர்த்தத்தைச் சொல்லுகிறது. இப்படிக் காயத்ரீமஹாமந்த்ரத்தின் மூன்று பாதங்களால் வேதத்தில் சொல்லிய ஞானகாண்டம், உபாஸனுகாண்டம், கர்மகாண்டம் முறையே காட்டப்பட்டிருக்கின்றன.—(மைத்ராயணச்ருதி.)

ராமரக்ஷா.

காயத்ரீமஹாமந்த்ரத்தின் அர்த்தமே ராமரக்ஷையிலுள்ள பதங்களால் காட்டப்படுகின்றன. ராமரக்ஷையிலிருக்கும் எல்லாப்பதங்களும் ராமாயணத்தின் கதையையே காட்டுகின்றன. எப்படியெனில் :

1. **ராகவன் என் தலையை ரக்ஷிக்கட்டும்.**—அழிவுள்ள ஜீவனுடைய அன்னமயகோசத்தில் ப்ரஸித்தனுய, ப்ரஹ்மாண்டத்திற்கு அபிமானியான புருஷன் ப்ரஹ்மாண்டரூபமான என் தலையைக் காப்பாற்றட்டும்.

2. **தசரதனுடைய புத்ரன் என் நெற்றியை ரக்ஷிக்கட்டும்.**- பத்து இந்த்ரியங்களாகிற குதிரைகளுள்ள ப்ராணமயத்தின் பரமானமனேமயகோசத்தின் கார்யமாய் ஆத்மாவைப்போலிருக்கும ப்ராணமயகோசாபிமானியானவன், ப்ரஹ்மாண்டத்திற்குபபிறகு ஸிருஷ்டிக்கப்பட்ட ப்ரஹ்மதேவர் எழுந்துகிற இடத்தைக் காப்பாற்றட்டும். இதனுல் அன்னமயனைவிட ப்ராணமயனும, அவனைவிட மனேமயனும் மேலானவனென்று சொல்லப்பட்டது.

3. **கௌஸல்யையின் புத்ரன் என் கண்களை ரக்ஷிக்கட்டும்.**—ஸகல விஷயங்களையும் க்ரஹிக்கும் ஸாமர்த்யமுள்ள விக்ஞானை (புத்தி) மயன், ஞானஸாதனமாகிய கண்களைக் காப்பாற்றட்டும். இதனுல் மனேமயனைவிட விக்ஞானமயன் மேலானவனென்று காட்டப்பட்டது.

4. **விச்வாமித்ரருக்கு ப்ரியராயிருப்பவர் என் காதுகளை ரக்ஷிக்கட்டும்.**—ஸகல ஜகத்தினிடம் அகாரணவாத்ஸல்யமுள்ள ஆனந்தமயனும், ஸுஷுப்தியில் ஸகல துக்கத்தையும அடியோடே

நாசஞ்செய்கிறவனும், ஆனந்தரூபியும், ப்ரக்ஞானகனமாயுமிருப்பவன் அவனையடைவதற்கு வழியாயிருக்கும் காதுகளைக் காப்பாற்றட்டும்.

இந்தச்லோகத்தின் முதல் பாதத்தால் ஸ்ரீராமசந்த்ரபரமாத்மாவிடம் ப்ரஹ்மாண்டத்தை ஆரோபணம் செய்து, மற்ற மூன்று பாதங்களால் அதையபவாதம்செய்து, காயத்ரீயின் முதல் பாதத்தினர்த்தமாகிய சுத்தப்ரஹ்மஸ்வரூபமானது காட்டப்பட்டது.

5. யாகத்தைக்காப்பாற்றுகிறவர் என் மூக்கை ரக்ஷிக்கட்டும்.—யாகபலத்தைக் கொடுப்பவர், அதின் பலமாகிய திவ்யமான வாஸனை முதலியவைகளை க்ரஹிக்கும் ஸாதனமாகிய க்ராணம், ரஸனம் என்ற இந்த்ரியங்களை ரக்ஷிக்கட்டும்.

6. ஸுமித்ராபுத்ரனிடம் ப்ரீதியுள்ளவர் என் முகத்தை ரக்ஷிக்கட்டும்.—ஜீவனுக்கு அதிகமித்ரரான ஈசவரனிடமுண்டான ஹிரண்யகர்ப்பனிடம் ப்ரீதியுள்ளவர். க்ரமமுக்தியடைபவர்கள், ஸத்யலோகஞ்சென்று ஹிரண்ய கர்ப்பனிடத்தில் ஞானோபதேசம் பெற்று அவருடன் ப்ரவதஸாயுஜ்யத்தை அடைகிறார்கள் (அதில் ப்ரீதியுள்ளவர்).

7. வித்யைக்கு நிதியானவர் என் நாக்கை ரக்ஷிக்கட்டும்.—வித்யையாலேயே அறியக்கூடியவர் (எல்லா வித்யைகளையும் ப்ரவர்த்திக்கச்செய்பவர்) வித்யையை க்ரஹிக்க ஸாதனமான நாக்கைக் காப்பாற்றட்டும்.

8. பரதனால் நமஸ்கரிக்கப்பட்டவர் என் கழுத்தை ரக்ஷிக்கட்டும்.—காமபலத்தை ஸம்பாதிக்கும் கர்மகாண்டத்தை யனுஷ்டிப்பவர்களால் (யஜமானர்கள்) யாகாதி கார்யங்களால பூஜிக்கப்பட்டவர் (யாகத்தில ப்ரீதியுள்ளவர்); "ப்ராஹ்மணர்கள் யாகத்தினால அதையறிய விரும்புகிறார்கள்."—(சுருதி.)

யாகமானது, மந்த்ரம், ஸ்தோத்ரம், சஸ்த்ரங்களால் நிறைவேற்றக்கூடியதாகையாலும், அவைகளை எப்பொழுதும் கண்டத்தில் வைத்துக்கொள்ளவேண்டுமாகையாலும், கழுத்தைக் காப்பாற்றட்டும் என்று சொல்லப்பட்டது. யாகம் முதலிய ஸத்கர்மங்களைச்செய்து, அதிலுண்டான புண்யத்தால் உபாஸனமார்க்கத்தையடைந்தவன், க்ரமமுக்திக்கு வழியான ஸூத்ராத்மாவையடைவான்" என்று இந்த இரண்டு ச்லோகங்களால் ஏற்படுகிறது.

9. திவ்ய ஆயுதங்களுள்ளவர் என் தோள்களை ரக்ஷிக்கட்டும்.—மனிதனாயிருக்கும்போதும் ஐச்வர்யரூபமான சார்ங்கம் முதலிய

திவ்யமான ஆயுதங்களுள்ளவர் ஆயுதம் தரிக்கும் ஸ்தானங்களைக் காப்பாற்றட்டும்.

10. **பரமசிவன் வில்லை முறித்தவர் என் கைகளை ரக்ஷிக்கட்டும்.**—மனிதனாயிருக்கும்போதும், மேருமலை ரூபமான சிவன் வில்லைப் புஜபலத்தால் முறித்தாரென்பதால், பரமசிவனைவிட மேலானவர். "த்ரிபுரஸம்ஹாரகாலத்தில், பரமசிவனுக்குப் பூமி ரதமாகவும், ப்ரஹ்மதேவர் ஸாரதியாகவும், மேருமலை வில்லாகவும், மஹாவிஷ்ணு பாணத்தின் முனையாகவுமிருந்தார்கள்."

11. **ஸீதையின் பதி என் கைகளை ரக்ஷிக்கட்டும்.**—10, 11-வது மந்த்ரங்களால், விசுவாமித்ரரிடம் பெற்றுக்கொண்ட பலையென்கிற வித்யையின் மஹிமையான விசேஷ சரீரபலம் காட்டப்பட்டிருக்கிறது.

12. **பரசுராமனை ஜயித்தவர் என் ஹ்ருதயத்தை ரக்ஷிக்கட்டும்.**—ப்ரஹ்மதேஜஸையும், வைஷ்ணவமான தேஜஸையும் தரிக்கும் பரசுராமனை ஜயித்து, அவனுடைய தபஸை நாசஞ்செய்ததால் ஹ்ருதயபலமுள்ளவர். இங்கே, நினைத்தமாத்ரத்தில் அமானுஷமான கார்யங்களைச் செய்யக்கூடிய பலத்தைப் புஷ்டிபண்ணும் அதிபலையென்ற வித்யையின் மஹிமை காட்டப்பட்டது. பரமேசவரனுடைய மூன்றாவது ரூபம் ப்ரஹ்மா, விஷ்ணு, பரமசிவனைவிட மேலானதென்று மூன்றாவது ச்லோகத்தால் காட்டப்பட்டது.

13. **கரனைக்கொன்றவர் என் மத்யபாகத்தை ரக்ஷிக்கட்டும்.**—கரன் முதலியவர்கள் விரோதபுத்தியுடன் எப்பொழுதும் த்யானம் செய்தவர்களாகையால், பகவானை ஒருபொழுதும் நினையாதவர்களைவிட மேலானவர்கள். மத்யஸ்தானமுள்ளவர்களுக்குப் பகவானும் அவர்களுடைய பக்திக்குத் தக்கபடியே நிக்ரஹரூபமான அனுக்ரஹம் செய்தார்.

14. **ஜாம்பவானுக்கு ஆச்ரயமாயிருப்பவர் என் தோப்புளை ரக்ஷிக்கட்டும்.**—ஜாம்பவான் ஆபத்காலத்தில் பகவானைத் தன்னுடைய க்ஷேமார்த்தமாய்ப் பஜனம் செய்ததபடியாலும், விரோதபுத்தியில்லாமையாலும், கரன் முதலியவர்களுடைய பஜனத்தைவிட இது மேலானது.

15. **சுக்ரீவனுக்கு அதிபன் என் இடுப்பை ரக்ஷிக்கட்டும்.**—"நீ எனக்குக்கொடு, பின்பு உனக்கு நான் கொடுக்கிறேன்" என்ற ந்யாயப்படி ஸுக்ரீவன் வ்யாபாரிபோல் முந்தித்தன் கார்யத்தை முடித்துக்கொண்டு பிறகு பகவானுடைய கைங்கர்யத்தைச்செய்த

படியால் ஜாம்பவானுடைய பஜனத்தைவிட கொஞ்சம் குறைவானது.

16. **ஹநுமானுடைய ப்ரபு, என் துடைகளை ரக்ஷிக்கட்டும்.**—ஹநுமான் யாதொன்றையும் விரும்பாமல், ஈச்வரார்த்தமாய்ப் பகவானைப் பஜித்தவர்; மிகவும் அந்தரங்கர்; குழந்தைபோல் பகவானால் மடியில் ஏற்றிவைத்துக் கொள்ளக்கூடியவர்; ஆகையால், அவருடைய பக்தி மிகவும் மேலானது. இம்மாதிரி கை கால் முதலிய அவயவங்களுடன் ஆராதிக்கக்கூடிய ஸர்வேசனை நால்வகையான பக்தர்கள் நான்குவிதமாய் ஆராதித்தார்கள் என்று இந்த நாலாவது ச்லோகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

17. **அணைகட்டியவர் என் முழங்கால்களை ரக்ஷிக்கட்டும்.**—ஸம்ஸாரமாகிய ஸமுத்ரத்திற்கு அணையாயிருப்பவர், குழந்தைப்பருவத்தில் நடப்பதற்கு ஸாதனமான முழங்கால்களைக்காப்பாற்றட்டும். இதனால் ஸ்தூலதேஹத்தை அதிக்ரமித்தவன் என்று தெரியவருகிறது; இம்மாதிரி த்யானஞ்செய்பவன் விதேஹமுக்தனென்று சொல்லப்படுகிறான்.

18. **பத்துத்தலையுள்ளவனை (ராவணனை)க்கொன்றவர் என் கணைக்கால்களை ரக்ஷிக்கட்டும்**—பத்து இந்த்ரியங்களைப்போகஸாதனங்களாயுடைய லிங்கசரீரத்தைப்போக்கடித்தவர், திருடமான தேஹமுடைய சிசுவிற்கு நடப்பதற்கு ஸாதனமான கணைக்கால்களைக் காப்பாற்றட்டும். இந்த அவஸ்தையில் த்யானம் செய்பவன் லிங்கசரீரத்தை அதிக்ரமித்தவனாகையால் ப்ரகிருதிலயமடைகிறான்.

19. **விபீஷணனுக்கு ஸ்ரீயைககொடுத்தவர் என் கால்களை ரக்ஷிக்கட்டும்.**—பயங்கரமான அக்ஞானம் விலகினவனுக்கு ஆனந்தத்தைக்கொடுப்பவர், வேகமாய் நடப்பதற்கு ஸாதனமான கால்களைக்காப்பாற்றட்டும். "இது, இவனுக்கு மேலான ஸம்பத்." (ச்ருதி.) இங்கே ஸர்வ அனர்த்தங்களுடைய நாசமும், ஆனந்தானுபவமும் சொல்லப்பட்டிருப்பதால் இம்மாதிரியான அவஸ்தையுள்ளவனே முக்தனென்று சொல்லப்படுகிறான்.

20. **ராமன் எனது ஸர்வ சரீரத்தையும் காப்பாற்றட்டும்.**—எல்லாவற்றிற்குமதிபதியாகையால ப்ரஹ்மாண்டமண்டபத்தில் ரமிக்கும் பரமாத்மாவானவர், முக்தியடைய விரும்பும் என்னுடைய மூன்று வகையான சரீரத்தையும் யோகமார்க்கத்தின் இடையூறுகளைப் போக்கி, ப்ரஹ்மஸாக்ஷாத்காரத்திற்குத்தக்கவைகளாகச்செய்யட்டும்.

ஆகையால் முதலில் "ராகவன்" என்ற பதத்தால் ப்ரஹ்மத்தினிடம் ப்ரபஞ்சத்தை அத்யாரோபம் செய்து, பிந்தின பதங்களால் அதை அபவாதம் செய்து, அதிஷ்டானத்தை யடையவேண்டியதற்காக த்யான யோக்யமான ஸமஷ்டி, வ்யஷ்டி ரூபத்தைக் காண்பித்து, நான்காவது சலோகத்தாலும், 5-வது சலோகத்தின் முதல் பாதியாலும் ஸமஷ்டி உபாஸனையும், இரண்டாவது பாதியால் அனர்த்தநிவர்த்திபூர்வகமான ஆனந்தவாப்தியும் காண்பிக்கப்பட்டது. ஆகையால், காயத்ரீயே இதற்கு விதை; அதன் 24 அக்ஷரங்களையும் ஆயிரம் சலோகங்களுக்கு ஆரம்பத்தில் ஒவ்வொரு அக்ஷரமாக அமைத்து வால்மீகி மஹர்ஷி ஸ்ரீமத்ராமாயணத்தைச்செய்து முடித்தார்.—(அபியுக்தர்கள்.)

ராமாயணத்திற்கு வேதம் மூலமென்பது.

வேதத்தில் சொல்லிய விஷயமே ராமாயணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் வேதம்போலப் படிப்பது, கேட்பது முதலியவைகளால் ஸகல புருஷார்த்தத்தையும் கொடுக்கக்கூடியது. "வேதாந்தத்தால் அறியக்கூடிய பரமபுருஷன் ஸ்ரீராமனென்ற திவ்யநாமத்துடன் தசரதருக்குப் புத்ரனாயவதரித்தபோது, அவருடைய ஸ்வரூபத்தை ப்ரதிபாதிக்கும் வேதமும், வால்மீகி மஹர்ஷியின் முகமாய ராமாயணமென்ற பெயருடன் அவதரித்தது. ஆகையால், ஓ, பார்வதி! ராமாயணம வேதமே என்பதில் ஸம்சயமில்லை."—(அகஸ்த்யஸம்ஹிதா.)

"வால்மீகி மஹர்ஷியானவர், குசலவர்கள் மேதாவிகளாய் வேதங்களையத்யயனஞ்செய்து அவைகளினர்த்தத்தை நன்றாயறிந்திருப்பதைப் பார்த்து, ஸீதையின் சரிதமான ராமாயணமென்ற மஹாகாவ்யத்தை வேதார்த்தங்களெல்லாம் இதிலிருக்கின்றனவென்று தெரியப்படுத்த அவ்விருவர்களுக்கும் உபதேசித்தார்."—(வா-ரா. I. 4.)

இம்மாதிரியே ராமாயணத்திலும் அதற்கு மூலமாகிய வேதத்திலும், கதாபாகம் வெளிப்படையாயும் ஆத்மபரமான அர்த்தம் ரஹஸ்யமாயு மிருக்கிறது. இதை வித்வான்கள் ஊஹித்தறியவேண்டும். "மந்த்ரமாகிய மடு, மோக்ஷரஸத்திற்கு மாதாவான கதையென்ற வாய்க்கால் வழியாய் வித்யையாகிற வயலுக்குப் பாய்கிறது. அதை நடுவில் கர்மமார்க்கத்தை யனுஷ்டிப்பவர்கள் குடிக்கிறார்கள்." "சுக்ரன் என்ற அரசன், மரணமடைந்தவன் பணத்தைக்கைவிடுவதுபோலப் புஜ்யு என்னும் தன் பிள்ளையை

ஸமுத்ரத்தில் தள்ளிவிட்டான். ஓ, அச்வினீ தேவர்களே! நீங்கள் ஆகாசம்போன்ற ஸமுத்ரத்தில் மிதக்கக்கூடியவைகளும், ஜலமில்லாத (ஜலத்தின் உபத்ரவமில்லாத) வைகளுமான அநேக ஓடங்களால் அவனை அவனுடைய ஸைன்யத்துடன் கரைசேர்த்தீர்கள்" என்ற அர்த்தமுள்ள மந்த்ரம், அச்வினீதேவர்களைத்தேவதையாயுடைய யாககர்மத்தில் ஜபிக்கவேண்டியது. யாகபூர்த்தியை இச்சித்தவர்களுக்கிஷ்டமான அர்த்தம் இங்கே காட்டப்பட்டது.

"அக்ஷரனும் ஸ்வப்ரகாசனுமிருக்கும் பரமாத்மாவினிடம் ஸகல தேவர்களும் ரிக்வேதமந்திரங்களுமிருப்பதால், அவரைத்தெரிந்துகொள்ளாதவன், கேவலம் மந்த்ரத்தால் என்ன செய்யப்போகிறான்?" என்ற ச்ருதிப்படி, எல்லா மந்த்ரங்களும், இந்த்ரியதேவதைகள் முதலியவைக்கு அதிஷ்டானமான ப்ரஹ்மத்தையே சொல்லுகின்றன என்று ஏற்படுகிறது. அதைத்தெரிந்துகொள்ளாதவனுக்கு அத்யயனத்திலும் அதிகாரமில்லையென்று சொல்லப்பட்டிருப்பதால், முன்காட்டிய மந்த்ரத்திற்குப் பரமாத்மபரமான அர்த்தம் பின்வருமாறு கண்டுகொள்க.

"புத்ரன் முதலியவைகளில் ஆசையுள்ளவன், பூர்வத்தில் செய்த கர்மங்களின் பலத்தை யனுபவிக்கும் ஆத்மாவை, ஸம்ஸாரஸமுத்ரத்தில தள்ளிவிட்டான். ஓ ஸூத்ராத்மா! அந்தர்யாமி! அதை நீங்கள் ஆசார்யரூபமாக அக்ஞானத்தைப்போக்கக்கூடியவைகளும் ஹிருதயாகாசத்தில் ஸஞ்சரிப்பவைகளுமான மஹாவாக்யமாகிற ஓடங்களால் காப்பாற்றுகிறீர்கள்."

ஆக்ஷேபம். இந்த மந்த்ரத்தில் அச்வினீதேவர்கள் ஸ்தோத்ரம் செய்யப்படுகிறார்கள். இதில் அநித்யபதார்த்தங்களைச் சொல்வதால், இவையடங்கிய வேதம் மனிதர்களால் செய்யப்படவில்லையென்று எப்படிச் சொல்லலாம்?

ஸமாதானம். கலை முதலியவை எப்படி ப்ரவாஹரூபமான அநாதிபதார்த்தங்களென்று ஒப்புக்கொள்ளுகிறோமோ, அப்படியே ஒவ்வொரு கல்பத்திலும் ஒரே மாதிரியான ராமாவதாரமேற்படுவதாக ஒப்புக்கொண்டு, ப்ரவாஹரூபியான அநாதியென்று தேவதாதிகரணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விதமான மந்த்ரங்கள் கதைகளைச்சொன்னாலும், ப்ரஹ்மவித்யையை உபதேசிப்பதிலேயே முக்யதாத்பர்யமுள்ளவைகளென்று சமஸாதிகரணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. எப்படியென்றால் "சிவப்பு, வெளுப்பு, கறுப்பு இந்த வர்ணமுள்ள அஜையை" என்ற மந்த்ரத்தில் 'அஜா' முதலிய சபதங்களுக்கு ஸ்வபாவமான அர்த்

த்தை அங்கீகரித்தால் தெரிந்த விஷயத்தையே மந்த்ரமும் சொல்லுகிறதென்றேற்படுகிறது. அப்படியானால் அந்த வாக்யங்கள் அப்ரமாணங்களாகும். ஆகையால் 'அஜா' சப்தத்திற்குத் தேஜஸ், ஜலம், அன்னங்களின் ரூபமாகிய ப்ரக்ருதியே அர்த்தமென்று ஸித்தாந்தம் செய்யப்பட்டிருக்கிறது. இப்படியே மூலமான மந்த்ரங்களில் தோன்றும் கதை அவாந்தரதாத்பர்யமென்றும், வித்யாவிஷயத்திலேயே முக்யதாத்பர்யமென்றும் சொல்வதே ந்யாயம். "எல்லா வேதங்களும் எந்தப் பதத்தைச் (ஸ்தானத்தை) சொல்லுகின்றனவோ, எல்லாப் பெயர்களும் எவனையே அடைகின்றனவோ" என்று ச்ருதியில் சொல்லியிருப்பதால், வேதம் ஸ்ரீராமசந்த்ரபரமாத்மாவையே சொல்லுகிறது. இந்த்ரன் முதலிய பெயர்களும் அந்த மூர்த்தியின் நாமங்களே ஆகையால், எல்லா சப்தங்களுக்கும் அவரே பரமதாத்பர்யமென்பது நிஜம். ஆனாலும், அந்தச்சப்தங்கள் அந்தந்த ப்ரகரணத்திற்கு அனுகுணமான கதையைச்சொல்வதாயும் ஒப்புக்கொள்ள வேண்டியது அவச்யம்.

ஆ. அந்யதைவதத்தைசொல்லும் சப்தங்கள் ராமகதையை எப்படிச்சொல்லமுடியும்? அல்லது பலாத்காரமாய் அதே சப்தங்களுக்கு ஸ்ரீராமபரமான அர்த்தம் சொல்வதாயிருந்தால் ஒரு சப்தத்திற்கு அநேக அர்த்தம் சொல்வது ந்யாய விரோதமல்லவா?

ஸ. 1, 2, 3, 4 முதலிய எண்களைக்குறிக்கும் ரேகைகள் ஒரே மாதிரியானவைகளே. ஸ்தான பேதத்தால் ஒன்று, பத்து, நூறு, ஆயிரம் என்று பல எண்களைக்குறிப்பிடுகின்றன. ஒரே பதமாவது வாக்யமாவது வேறு பதம், வேறு வாக்யங்களுடைய சேர்க்கையாலும் ப்ரகரணபேதத்தாலும் அநேக அர்த்தங்களைக் கொடுக்கும். 'அமிருதம்' என்னும் பதத்திற்கு 'மோக்ஷம்' என்று அர்த்தம். "எப்பொழுது இவனுடைய மனஸிலிருக்கும் விருப்பங்கள் யாவும் ஒழியுமோ, அப்பொழுது மாணத்திற்குட்பட்டவன் அமிருதனாகிறான். இவ்விடத்தில் ப்ரஹ்மத்தை யடைகிறான்."—(ச்ருதி.) அதே பதத்திற்குத் 'தைவத்தன்மை' என்னும் அர்த்தம். "ஸோமத்தைப் பூஜிப்போம்; அமிருதர்களாவோம்."—ச்ருதி. அதற்கே 'ஸந்தானம்' என்றும் அர்த்தம், "அதே உனக்கு மனிதனுடைய அமிருதம்."—(ச்ருதி.)

"தேவர்கள் யக்ஞத்தால் யக்ஞத்தைப் பூஜித்தார்கள்." என்ற விடத்தில் 'யக்ஞ' சப்தத்திற்குப் 'பரமேச்வரன்' என்பது

அர்த்தம்; ஜீவனை ப்ரஹ்மமாய்ப் பார்க்கவேண்டுமென்பது தாத்பர்யம். "அந்த யக்ஞத்தைப் பர்ஹிஸ்" என்ற மந்த்ரத்தில், 'யக்ஞ' சப்தம் 'இந்த்ரன், அக்னி' முதலிய தேவதைகளைச் சொல்லுகிறது. அக்னியை கடைவதிலும் உபயோகப்படுத்தப்பட்ட அந்த 'யக்ஞ' சப்தம், யக்ஞத்திற்கு அங்கமாகிய அக்னியைச்சொல்லுகிறது. இதில் முதலாவதான ஆத்யாத்மிகமான அர்த்தம் அடையத்தகுந்ததாகையால் முக்யம். இரண்டாவதான ஆதிதைவிகமான அர்த்தம் அதற்கு ஸமீபத்ததாகையால் அதைவிடக் கீழ்ப்பட்டது. மூன்றாவதான ஆதிபௌதிகமான அர்த்தம் அதைவிடக் கீழ்ப்பட்டது. வேதங்களில் ப்ரயோகிக்கப்பட்டிருக்கும் "இந்த்ர" என்னும் பதம் பரமைச்வர்யமுள்ளவனென்கிற காரணத்தினாலும், ரூடியினாலும், முக்யவிருத்தியால் மஹேந்த்ரனையே சொல்லுகிறது. கார்ஹபத்யாக்னியின் உபஸ்தானத்தில் உபயோகப்படும் ச்ருதியில் அதேசப்தம் கார்ஹபத்யாக்னியைச்சொல்லுகிறது.

ஆகாசம் என்பதற்கு ப்ரஸித்த பூதாகாசமே அர்த்தம். இதற்கு ஜகத்காரணனாகிய பரமாத்மாவென்ற அர்த்தமுமுண்டு. "காணப்படும் ஸகலமும் ஆகாசத்தினிடத்திலிருந்தே உண்டாகின்றன."—(ச்ருதி.) லிங்கத்தினால் ரூடி அடக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் வேறு தெய்வங்களைப்பற்றின சப்தங்கள் கதாபரமானாலும் ப்ரகரணம் முதலிய பலிஷ்டமான லிங்கத்தால் பரமாத்மபரமான அர்த்தத்தைச் சொல்லுமென்பதில் யாதொரு தோஷமுமில்லை.

ஆ. கர்மத்தில விநியோகிக்கப்படாத மந்த்ரங்கள் சமலாதிகரணத்தில் சொன்னபடி வ்யர்த்தமாகாமலிருப்பதற்காகப் பரமாத்மபரமென்று சொன்னாலும், கர்மத்தில் விநியோகமுள்ளவை பரமாத்மாவாகிய ராமனையே குறிப்பிடுகிறதென்று சொல்வது பொருந்துமா?

ஸ. பொருந்தும். 'எல்லா வேதங்களு'மென்று மேற்சொன்ன ச்ருதி காட்டியிருப்பதினால் அதில் சிலவற்றை விலக்க நியாயமில்லை.

ஆ. வித்யாப்ரகரணத்தில் படிக்கப்பட்ட சிலமந்த்ரங்களைத் தவிர வேறு ப்ரகரணத்திலிருக்கும் மந்த்ரங்களுக்கும் வேறு அர்த்தம் கல்பிப்பது ந்யாயமாகுமா? அப்படி வேறு அர்த்தம் கல்பிப்பதானால் கிளையை வெட்டுவதற்காக ஏற்பட்ட மந்த்ரங்களுக்கும் பரமாத்மபரமாய் அர்த்தம் சொல்லவேண்டும். அப்ப

டிச் சொல்வதால் வேதவாக்யங்களுக்குப் பீடையும் கர்மகாண்டத்திற்குக் கெடுதியும் நேரிடும். (அதில் ஜனங்களுக்கு நம்பிக்கை குறையும்.)

ஸ. ஒரே விஷயத்தை அவரவர்கள் புத்திக்குத் தக்கபடி பலவகையாய்த் தெரிந்துகொள்கிறார்கள். கயிற்றை ஒருவன் ஸர்ப்பமென்றும், மற்றொருவன் தடியென்றும், மற்றொருவன் கயிறென்றும் நேரில் பார்த்துத் தெரிந்துகொள்ளுகிறான். "எந்தப் புருஷன் கண்ணில் காணப்படுகிறானோ அவன் ஆத்மா, அது அபயம். அது ப்ரஹ்மம் என்று சொன்னான்" என்ற ப்ரஜாபதியின் வாக்யத்தினால், விரோசனன், தேஹம் முதலியவைகளுடன் கூடிய ஆத்மாவே அம்ருதம் முதலிய குணங்களுள்ளதாகத் தெரிந்துகொண்டான். இந்த்ரன் அதே வாக்யத்தினால் அதே ஆத்மாவை ஸ்தூலம் முதலிய தேஹத்தை அதிக்ரமித்து, அபயம் முதலிய குணங்களுள்ளதென்று அறிந்தான். ஆகையால் தெரிந்துகொள்பவனுடைய பேதத்தினாலும் மந்த்ரங்களுக்கு அர்த்தபேதம் உண்டாகிறது. அவரவர்களுடைய அதிகாரத்திற்குத்தக்கபடி அர்த்தத்தைக்ரஹித்துக்கொள்ளுகிறார்கள். "பிறகு சரீரத்திலிருக்கும் விருத்ரனை சதக்ருது (இந்த்ரன்) கண்ணிற்குத்தெரியாமலிருக்கும் வஜ்ரத்தால் கொன்றான் என்று நாம் கேள்விப்பட்டிருக்கிறோம்."—(பாரதம், அச்வமேதம்.) இதற்கு, உத்தமாதிகாரிகள், "உலகம் முழுவதும் அக்ஞானத்தால மூடப்பட்டிருக்கும் பொழுது, ஜீவன், கண்ணிற்குப் புலப்படாத விவேகத்தால் அந்த அக்ஞானத்தை ஒழித்தானென"ன்று சொல்வார்கள்.

காலசக்ரத்தைச்சொல்லும் ரிக்குக்கு மந்தாதிகாரிகளையுத் தேசித்துப்பின்வருமாறு அர்த்தம் செய்யப்பட்டிருக்கிறது. அதில் சொல்லிய ஸ்திரீகள் தாதாவும், விதாதாவும். கறுப்பும், வெளுப்புமான நூல்கள் ராத்ரி, பகல. இம்மாதிரி வர்ஷம், மாஸம், பக்ஷங்களுக்கு வ்யாக்யானம் செய்யப்பட்டிருக்கிறது. உத்தமாதிகாரிகள் பின் வருமாறு அர்த்தஞ் செய்கிறார்கள். ருதுக்கள் என்பது ஆறு இந்த்ரியங்கள்; ஒவ்வொரு ருதுவில் இரண்டு மாஸங்களடங்கியிருக்கின்றன என்பது ஒவ்வொரு இந்த்ரியத்திலும், ராகம் (ஆசை), த்வேஷம் (விரோதம்) கலந்திருக்கின்றன. ஒவ்வொரு மாஸத்திற்கும் இரண்டு பக்ஷங்களுள்ளதுபோல், ராகத்திலும் த்வேஷத்திலும், சுக்லம், க்ருஷ்ணம் என்ற பேதமுண்டு. தர்மவிஷயமான ராகம், சுக்லம்; அதர்மவிஷயமான ராகம், க்ருஷ்ணம். ஒவ்வொரு பக்ஷத்திலும் ஸூர்ய சந்த்ரர்களுடைய கதிவசத்தினால் ப்ரதமை முதலிய பதினைந்து

திதிகள் ஏற்படுகின்றன. ஸூர்யன் ஆத்மா; சந்த்ரன் பதினாறு கலைகளுள்ள மனஸ்: (1. ப்ராணன், 2. ச்ரத்தை, 3. ஆகாசம், 4. வாயு, 5. தேஜஸ், 6. ஜலம், 7. பூமி, 8. இந்த்ரியம், 9. மனஸ், 10. அன்னம், 11. வீர்யம், 12. தபஸ், 13. மந்த்ரம், 14. காமம், 15. லோகங்கள், 16. பெயர்.) இவைகளில் பதினாறுவது கலைமட்டும் மிகுதியாயுள்ள மனஸ், தூக்கத்தில் மற்றக் கலைகளுடன் ஆத்மாவினிடம் லயித்தால் அது கேவல தமோமயமாகிய அவித்யை. இதுவே சந்த்ர ஸூர்யஸம்யோகமாகிற அமாவாஸ்யை. பின்பு விவேகத்தால் கலைகள் ஒவ்வொன்றாய் ஆத்மாவினிடமிருந்து வெளிப்படும்போது ஞானமாகிய சந்த்ரன் விருத்தியாகிறான். ஆத்மாவாகிய ஸூர்யனும், ஸத்வமாகிய மனஸும் ஒன்றோடொன்று சேராமல் விலகியிருப்பதே வித்யையாகிற பௌர்ணமீ. இதே கர்மபலமாகிய ஸம்ஸாரசக்ரம். ஆகையால் வித்வான்களுக்குப்பரமார்த்தபரமாயும், அக்ஞானிகளுக்குப் பரம்பரையாகவும் அர்த்தம் ஏற்படும்.

ஆ. ஆத்மபரமான அர்த்தஞ்செய்வது ந்யாயமானால் பாஷ்யகாரர் அப்படிப்பட்ட அர்த்தத்தை ஏன் காட்டவில்லை? மேலும் விருத்ரவதம் முதலிய கதைகள்போல் ராமாயண கதை வேதத்தில் ஓரிடத்திலும் சொல்லப்பட்டதாகத்தெரியவில்லை. வேதபாஷ்யத்திலும் ராமாயண கதையைக்காட்டவேயில்லை. ஆகையால் ராமாயணம் வேதமூலமென்றும், எல்லா மந்த்ரங்களுக்கும் அத்யாத்மபரமான அர்த்தமுண்டென்றும் எப்படிச் சொல்லலாம்?

ஸ. எல்லா மந்த்ரங்களுக்கும அத்யாதமபரமான அர்த்தமே முக்யமானது. வேதபாஷ்யகாரர் காமவிநியோகமுள்ளவைகளையும் ஸ்துதிபரமான ஆத்தவாதவாகயங்களையும், கர்மமார்க்கத்தில் ஜனங்களுக்கு ஆசையுண்டுபண்ணுவதற்காக அதற்குத்தகுந்த மந்த்ராதிகாரிவிஷயமான அர்த்தத்தை வெளியில் ப்ரவர்த்தித்தவராகையால், அந்த அப்ரதானமான அர்த்தத்தை வெளியிட்டார். வேதத்தில் ராமாயண கதை சொல்லப்படவில்லையென்று சொல்வது ந்யாயமல்ல. கண்ணில்லாத ஒருவன் தூணில் முட்டிக்கொண்டால் அந்தக்குற்றம் தூணைச்சேருமோ? வேதார்த்தம் முழுவதையும் நீ தெரிந்துகொள்ளாவிடில் அக்குற்றம் ராமாயணத்தினுடையதோ? "இதிஹாஸம், புராணங்களால், வேதத்தை நன்றாய் விஸ்தரித்து அர்த்தஞ் செய்ய வேண்டும். அல்பக்ஞானமுள்ளவனிடத்தில் வேதம் 'இவன் நம்மை நிருக்கால் கெடுத்துவிடுவானோ' வென்று பயப்படுகி

றது.''—(மஹாபாரதம்.) ஒவ்வொரு கண்ணுடியிலும் வீட்டிலுள்ள பல ஸாமான்களுடன் வீடு எப்படி காணப்படுகிறதோ, அப்படி ஒவ்வொரு தேவதையினிடத்திலும் மற்றத்தேவர்களுள்பட இவ்வுலகம் காணப்படுகிறது. ஆனதால் ஸகல தேவர்களும் தனித்தனியே ஜகத்திற்குக்காரணமே ஒவ்வொருவருக்கும் மற்றவர்கள் காரணமே. ஆகையால் அவர்களை ஸ்துதிப்பது ராமனை ஸ்தோத்ரம் செய்தலேயென்பதில் ஸந்தேஹமில்லை. வேத பாஷ்யகாரர் மந்த்ரவிநியோகத்தையனுஸரித்தவராகையால் அதற்குத்தக்கபடி வ்யாக்யானம் செய்தார். பலிஷ்டமான ப்ரகரணம்முதலிய லிங்கத்தினால் ராமனைத்தையனுஸரித்து மந்த்ரங்களுக்கு அர்த்தஞ்செய்வதில் யாதொரு தோஷமுமில்லை. மேலும் அர்த்தவாத வாக்யங்கள் மோஹத்தையுண்டுபண்ணக்கூடியதாகையால் அவைகளை அநுஸரித்துச்செய்யப்பட்ட அர்த்தம் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. "எவர்கள் இம்மாதிரி சொல்லுகிறார்களோ அவர்கள் தெரியாதவர்கள். அஜ்ஞானத்தினாலும் அர்த்தவாதத்தினாலும் ஏமாத்தப்பட்டார்கள்.''—(பகவத்கீதை.) "அல்பமான அர்த்தத்தைச்சொல்லும் வாக்குகள் பனியால் மூடப்பட்டிருக்கின்றன.''—(சுருதி.)

ஆகையால் எல்லா மந்த்ரங்களும் அஜ்ஞாகளுக்குப்பரம்பரையாயும் வித்வான்களுக்கு நேராகவும் ராமசந்த்ரபரப்ரஹ்மத்தையே போதிக்கின்றன.

ஆ. கர்மங்களில் விநியோகிக்கப்பட்ட மந்த்ரங்கள், த்ரவ்யம், தேவதை முதலியவைகளைப்ரகாசப்படுத்திக்கொண்டு, விதியின் அர்த்தத்தைக்காண்பிக்கின்றன. அவைகள் கதையை எப்படிச் சொல்லும்?

ஸ. எல்லா மந்த்ரங்களும் ஆத்யாத்மிககதையையாவது ஆதிதைவிககதையையாவது உபஜீவித்துக்கர்மத்திற்கு அங்கமாகிய தேவதை முதலியவைகளை ஸ்தோத்ரம் செய்து விதியின் அர்த்தத்தை ஞாபகப்படுத்துகின்றன. "நீர் கிருஷ்ணனுகிய ரூபமுள்ளவராய்ப் பெரிய மரங்களில் ப்ரவேசித்தீர். ஆனதால் உம்மை இரண்டுவகையாய் ஸம்பாதிக்கிறேன்.''—(சுருதி.) "கிருஷ்ணனென்கிற பரப்ரஹ்மரூபியாகிய நீர், அசையும் பொருள் அசையாப்பொருளடங்கிய ப்ரபஞ்சத்தையுண்டுபண்ணி அதில் ப்ரவேசித்துத்தாதாத்ம்யத்தை அடைந்திருப்பதால் ஸமித்ரூபியாயிருக்கிறீர். ஆகையால் உம்மை இருபத்தொருதடவை ஸம்பாதிக்கிறேன்'' என்று ப்ராஹ்மணத்தில் சொல்லிய ஜகத்தில்

ப்ரவேசித்த கதையைக் காட்டிக்கொண்டு ஸமித் பகவத்ரூபமென்பது சொல்லுகிறது.

"எதனுடைய ரூபத்தைத் தரித்து ஜலத்தில் மறைந்திருந்த இந்தப்பூமியையடைந்தாரோ, அவரால் வெட்டப்பட்ட மண்ணை (மிருத்) எடுத்துக்கொள்ளுகிற நாங்கள்."—(மந்த்ரம்.) இது வராஹாவதாரம் செய்த பகவானுடைய கதையைக்காட்டிக்கொண்டு வராஹத்தினுல் வெட்டப்பட்ட மிருத் மேலானதென்று சொல்லி அதை ஸம்பாதிக்கவேண்டுமெனபதைக் காட்டுகிறது.

"அன்ன ரஸத்திற்காகவும் பலத்திற்காகவும்" இந்த மந்த்ரம் கிளையைவெட்டுவதில் உபயோகிக்கப்படுகிறது. "தம்மால் ஸிருஷ்டிக்கப்பட்ட கிளையின் ஸ்வரூபத்தையடைந்த பகவானே! விராட்பாவத்திற்காகவும் (அன்னமென்பது விராட்), பரமானந்தத்தை யடைவதற்காகவும் (ரஸமே அவர்) வெட்டுவதனுல் உம்மை யடைகிறேன்' என்பது அதயாத்மபரமான அர்த்தம்; அசேதன விஷயமான ச்ருதிகளுக்கு இப்படி வ்யாக்யானஞ் செய்யவேண்டும். இப்படி அத்யாத்மபரமாய் அர்த்தம் செய்வதற்கு ப்ரமாணங்கள், "இதெல்லாம் புருஷனே," "இதெல்லாம் ப்ராஹ்மஸ்வரூபம்," "எல்லா வேதங்களும் எந்தப் பதத்தைச் சொல்லுகின்றனவோ," "இவையெல்லாம் எதை யடைகின்றனவோ," "அக்ஷரமான ப்ரகாசத்தில் ரிக்குகள்."—(ச்ருதி.) இதிஹாஸ புராணங்களைப் படித்து அவைகளின் உண்மையான அர்த்தத்தை அறிந்தவனான வித்வான்தான் இம்மாதிரி அர்த்தம் செய்வான். ஸமித்தையும் மண்ணையும் சேர்ப்பதையே புகழ்கிறவன் அல்பக்ஞானமுள்ள கர்மஜடன். கேவலம் பன்றியையே (வராஹத்தை) உபாஸிக்கிறவன் மத்யமன். பகவான் கிருஷ்ணனை யுபாஸிக்கிறானோ அவன் தத்வக்ஞன்; அவனே உத்தமன். இப்படியிருக்க "ஓ கிளையே! லௌகீகமான அன்னத்திற்காகவும் ரஸத்திற்காகவும் உன்னை வெட்டுகிறேன்" என்று பாஷ்யகாரர் செய்த அர்த்தம் கர்மிகளுக்கு ஆசையைக் கொடுப்பதாலும் வித்வான்களுடைய மனஸுக்குத் திருப்தியை யுண்டுபண்ணும். முன் காட்டியபடி அர்த்தம் செய்வதில் யாதொரு பாதகமுமில்லை. அதிகாரி பேதத்தால் அர்த்தபேதம் உண்டாகிறது.

ஆ. எந்தெந்த மந்த்ரங்கள் எதிலெதில் விநியோகிக்கப்பட்டதோ அந்தக் கர்மத்திற்குத் தகுந்த அர்த்தத்தைச் சொல்ல வேண்டும். அதற்குரிய அர்த்தம் கர்மத்திற்கு அனுகுணமாயில்லாவிடில் அதை விட்டுவிடுவதே உசிதமல்லவா?

ஸ. அப்படி நியமமல்ல. "இந்த மூவுலகத்தை மஹாவிஷ்ணு மூன்று காலடிகளால் தாண்டினார்."—(மந்த்ரம்.)

இது, வாக்கின் நியமம் தவறினதற்காக ப்ராயச்சித்த ரூபமாக ஜபத்திலும் ஸர்வ ப்ராயச்சித்தமாக ஆஜ்ய ஹோமத்திலும் விநியோகிக்கப்பட்டிருக்கிறது. விஷ்ணுவின் மஹாத்மயத்தை மட்டும் சொல்லும் இம்மந்த்ரத்தில் விநியோகத்திற்குத் தக்கபடி வெவ்வேறு அர்த்தம் செய்வதற்கு யாதொரு லிங்கமும் காணப்படவில்லை. பகவானுடைய வராஹ வாமனாதி அவதாரங்களை அறியாதவன் கேவலம் விநியோகத்தால் மாத்ரம் வ்யாக்யானம் செய்ய முடியாது. ஆகையால் கர்மஜடர்களுக்குக் கர்மங்களில் ப்ரீதியுண்டுபண்ணுவதற்காக வேதபாஷ்யகாரருடைய மதம் ஏற்பட்டபடியால், அந்த பாஷ்யத்தில் ராமகதை சொல்லப்படாமலிருந்தாலும், வேதத்தின் தாத்பர்யத்தை விவரிப்பதால் ராமாயணம் வேதமூலகமென்று ஏற்படுகிறது. இவ்விஷயம் ஸ்வல்ப ஞானமுள்ளவர்கள் தெரிந்துகொள்வது கஷ்டமானாலும் வித்வான்கள் அறியக்கூடியதே. இந்த அத்யாத்ம விஷயமான அர்த்தம் ராமாயணத்திலும் அதற்கு மூலமாகிய மந்த்ரங்களிலும் ரஹஸ்யமாயும் கதாபாகம் வெளிப்படையாயுமிருப்பதால், ஒவ்வொன்றிற்கும் கதை, வித்யாபரமான அர்த்தம், பாஷ்யகாரர் செய்த அர்த்தமென்று மூன்று அர்த்தங்கள் ஏற்படுகின்றன.

XI.

ராமாயணம் செய்யப்பட்ட காலம்.

ஸ்ரீராமன், ராவணன் முதலிய ராக்ஷஸர்களைக் கொன்று, அயோத்யாநகரம் சேர்ந்து ராஜ்யபாரஞ் செய்துகொண்டிருக்கும்போது அச்வமேதயாகஞ் செய்வதற்கு முந்தி வால்மீகி மஹர்ஷி இந்தக் காவ்யத்தைச் செய்தார்.—(வா-ரா. I. 4.)

பிறகு சத்ருக்னர் ராமனுடைய உத்திரவின்படி, மதுராநகரஞ் சென்று, லவணாஸுரனைக்கொன்று, பன்னிரண்டுவர்ஷங்களுக்குப் பின் திரும்பி வரும் வழியில் வால்மீகி மஹர்ஷியின் ஆச்ரமத்தில் தங்கினார். அவ்விடத்தில் குசலவர்கள் இரவில் ராமாயணத்தைக் கானஞ்செய்யக் கேட்டார்.—(VII. 71.)

"இதை யாருக்கு உபதேசிக்கலாமென்று வால்மீகி மஹர்ஷி யோசித்துக்கொண்டிருக்கையில் குசலவர்கள் ஸேவை செய்யலாய் அவரை நமஸ்கரித்தார்கள். அப்பொழுது அவர்களுக்கு உபதேசம் செய்தார்.—(ஷை I. 4.)

இதனால் ராகவன் ராவணாதிகளைக் கொன்று ராஜ்யபாலனஞ் செய்து வரும்போது, ஸீதையைக் காட்டிற்கு அனுப்பின பிறகு ராமாயணஞ் செய்யப்பட்டதென்று அறிகிறோம்.

XII.

ராமாயணத்தைப் படிக்கவேண்டிய க்ரமம்.

“காலையில் சூதாட்டக் கதையையும், மத்யாஹ்னத்தில் ஸ்த்ரீயின் கதையையும், ராத்ரியில் திருடனுடைய கதையையும் படித்து, ஸாதுக்கள் காலத்தைக் கழிக்கிறார்கள்,” என்ற பெரியோர்கள் வாக்யத்தால், ஸ்ரீமத்ராமாயணத்தை மத்யாஹ்னத்தில் படிக்கவேண்டுமென்று தெரிகிறது. ஒவ்வொரு நாளும் இருபது ஸர்க்கங்களுக்குக் குறையாமலும் மேற்படாமலும் படிக்கவேண்டுமென்றும், வால்மீகி குசலவர்களுக்கு உத்திரவு செய்ததாகத் தெரிகிறது. (வா-ரா. 7. 93.) ச்ராத்தகாலங்களில் ராமாயணத்தைப் படிப்பதால், பிதிருக்கள் திருப்தியடைகிறார்கள். படிப்பவனுக்கு, வஸ்த்ரம், பசு, ஸ்வர்ணம் முதலியவைகளைக் கொடுக்கவேண்டியது என்று சொல்லப்பட்டிருக்கிறது. (ஷை 111.) ராமஜனனம், ஸீதாவிவாஹம், பாதுகாபட்டாபிஷேகம், ஸுக்ரீவபட்டாபிஷேகம், விபீஷணசரணாகதி, ராமபட்டாபிஷேகம் முதலிய ஸமயங்களில் படித்து அர்த்தம் சொல்லுகிறவர்களுக்கு விசேஷ ஸன்மானம் செய்யவேண்டியது.

XIII.

ராமாயணத்தைப் படிப்பதின் பலம்.

ஸகல பாபங்களையும் போக்கடித்து, ஹிருதய சுத்தியைக் கொடுத்து, விசேஷ புண்யத்தை ஸம்பாதித்து வைக்கும் வேதங்களுக்கு ஸமானமான இந்த ராமசரித்ரத்தைப்படிப்பவன், ஸகல பாபங்களினின்றும் விடுபடுகிறான். தீர்க்காயுளைக்கொடுக்கும் இந்த ராமாயணத்தைப் படிப்பவன், ஸ்வர்க்கத்தில் புத்ர பௌத்ரர்களுடன், தேவர்களால் கொண்டாடப்படுகிறான். ப்ராஹ்மணன் இதைப் படித்தால் ஸகலவேதசாஸ்த்ரங்களின் தாத்பர்யங்களை அறிந்து, அவைகளைப்பிறருக்குப்போதிக்கும் திறமையை விசேஷமாய் அடைவான். க்ஷத்ரியன் படித்தால், ராஜ்யாதிபதியாவன். வைச்யன் படித்தால் வர்த்தகத்தில் மேன்மையடைவான். சூத்ரன் படிக்கக் கேட்டால் தன் ஜாதியார்களுக்குள் விசேஷ பெருமையடைவான்.” —(வா-ரா. I. 1.)

"ராமன், அவனுடைய பந்துக்கள், மித்ரர்கள், ராக்ஷஸர்கள் முதலியவர்களுடைய சரித்ரங்கள் ப்ரஸித்தமாயிருந்தாலும், ரஹஸ்யமாயிருந்தாலும், அவையெல்லாம் உனக்குத்தெரியட்டும். இந்தக் காவ்யத்தில் நீ சொல்லும் ஒவ்வொரு வார்த்தையும் பொய்யாகாது. இந்த லோகத்தில், பர்வதங்கள், ஆறுகள் எதுவரையிலிருக்குமோ அதுவரையில் உன்னால் செய்யப்பட்ட ராமசரித்ரமானது லோகங்களில் ப்ரஸித்தியடைந்திருக்கும்" (ஷை 2.) என்று ப்ரஹ்மா வால்மீகிக்கு அநுக்ரஹம் செய்து ஞானதிருஷ்டியைக்கொடுத்தார்.

"இது வேதத்தின் ரஹஸ்யார்த்தத்தை வெளிப்படுத்துகிறது. படிப்பதற்கும், பாடுவதற்கும் இனிமையானது. நவரஸங்களும் பொருந்தினது. ஏழு ஸ்வரஜாதிகளடங்கினதாய், த்ருதம், மத்யம், விளம்பிதம் என்ற மூன்று காலப்ரமாணங்களுக்கொத்ததாய், வீணை முதலிய வாத்யங்களுடன் கானஞ்செய்யக்கூடியது. லோகத்தில் இதுவே ஆதிகாவ்யம், இதுவே உத்தமகாவ்யம். பிற்காலத்தில் வரும் கவிகளுக்கு இதுவே முக்யமான ஆதாரம்."—(ஷை 4.)

"இது அரசர்களுக்கு ஆயுள், கீர்த்தி, ஜயம் முதலிய ஸகல மங்களங்களையும் கொடுக்கக்கூடிய ஆதிகாவ்யம். புத்ரர்களை விரும்புகிறவன், புத்ரலாபத்தையடைகிறான்; தனத்தை விரும்புகிறவன் தனத்தையடைகிறான். அரசன் தனது சத்ருக்களை ஜயித்துச் சக்ரவர்த்தியாகிறான். கௌஸல்யை, ஸுமித்ரை, கைகேயீ என்பவர்கள், ராமன், லக்ஷ்மணன், பரதன், சத்ருக்னனென்ற லோகோத்தமர்களான புத்ரர்களை அடைந்து, தாங்கள் உள்ளவரைக்கும் அவர்களுடைய பாக்யத்தைக்கண்டு ஆனந்தித்தாற்போல், இதைக் கேட்கும் ஸ்திரீகளும் புத்ர, பௌத்ர, ஸம்பத்துடன் எப்பொழுதும் ஆனந்தத்தை அநுபவிக்கிறார்கள். இதை ச்ரத்தையுடன் கேட்பவன் கோபத்தை ஜயித்தவனாய், ஸகல கஷ்டங்களையும் தாண்டுகிறான். தூரதேசங்களுக்குப் போனவன் திரும்பவும் தனது பந்துக்களைச் சேர்ந்து ஸந்தோஷிக்கிறான். ராகவன் இவன் ப்ரார்த்திக்கும் ஸகல வரங்களையும் கொடுக்கிறார். இதைக்கேட்பதால் ஸகல தேவதைகளும் திருப்தியடைகிறார்கள். கேட்பவர்களுடைய வீட்டிலிருக்கும் ப்ரதிகூலமான க்ரஹதேவதைகள் ப்ரஸன்னமாகின்றன. யௌவனஸ்திரீகள் இதைக்கேட்டால் உத்தமமான புத்ரர்களையடைகிறார்கள். க்ஷத்ரியர்கள் ப்ரதிதினமும் வணக்கமாய் ப்ராஹ்மணனிடத்திலிருந்து இதைப்படிக்கக்கேட்டால் அளவற்ற ஐச்வர்யத்தையும் புத்ரலாபத்தையுமடைகிறார்கள். குடும்பவிருத்தியையும், தனதான்யவிருத்தியையும், உத்தமமான ஸ்திரீகளையும், மேலான ஸுகத்தையும், லோகத்தில் ஸகலவித இஷ்டஸித்திகளை

யும், தேஹஸௌக்யத்தையும், தீர்க்காயுஸ்ஸையும், கீர்த்தியையும், அநுகுணமான ஸ்ஹோதரர்களையும், நல்ல புத்தியையும், விசேஷ தேஜஸ்ஸையும் அடைகிறான்."—(ஷை 6. 131.)

"ப்ரஹ்மலோகத்தில் வஸிக்கும் ரிஷிகள் ப்ரஹ்மாவிடத்தில் அநுமதி பெற்று உத்தரராமாயணத்தைக்கேட்பதற்கு ராமனுடைய ஸபைக்குத்திரும்பவும வந்தார்கள்."—(ஷை 7. 98.)

"இந்த ராமாயணத்தில், ஸர்வ வ்யாபியான பகவான் மஹா விஷ்ணுவானவர் கொண்டாடப்படுகிறபடியால், தேவதைகளும், கந்தர்வர்களும், ஸித்தர்களும், மஹர்ஷிகளும், ப்ரதிதினமும் ஸ்வர்க்க லோகத்தில் இதைக்கேட்டுபரமானந்தத்தை அநுபவிக்கிறார்கள். ஆயிரக்கணக்காப் அச்வமேதம், வாஜபேயம் முதலிய யாகங்களைச் செய்கிற பலமும் ராமாயணத்தின் ஒரு ஸர்க்கத்தைக்கேட்பதினால் கிடைக்கிறது. ப்ரயாகை முதலிய புண்யக்ஷேத்ரங்கள், கங்கை முதலிய புண்யநதிகள், நைமிசம் முதலிய புண்யமான ஆரண்யங்கள், குருக்ஷேத்ரம முதலிய புண்யஸ்தலங்கள் இவைகளுக்கு யாத்ரை செய்யும் பலம் ராமாயணத்தைக்கேட்பதால் கிடைக்கிறது. குருக்ஷேத்ரத்தில், ஸூர்யக்ரஹணகாலத்தில் விசேஷமாக ஸ்வர்ணத்தைத்தானஞ்செய்தபலமும், ராமாயணத்தைக்கேட்பதாலுண்டாகும் பலமும் ஒன்றுதான். விசேஷ சரத்தையுடன், ராமசரித்ரத்தைக் கேட்பவன் விஷ்ணுலோகத்தையடைந்து அவருடைய ஸாயுஜ்யத்தைப்பெறுகிறான்."—(ஷை 111.)

XIV.

இதர ராமாயணங்கள்.

ராமனுடைய சரிதரத்தை அவருடைய ஜீவகாலத்திலேயே வால்மீகியைத்தவிர இன்னும் சிலர் எழுதியிருக்கிறதாகத்தெரிகிறது. "சயவனரென்னும் மஹர்ஷி ராமசரித்ரத்தைச்செய்திருந்தும் அவருக்குக்கிடைக்காத கீர்த்தியை அவருக்குப்பின் ச்லோகரூபமாய் ராமசரித்ரத்தைச்செய்த வால்மீகி அடைந்தார்."—(அச்வகோஷருடைய புத்தசரிதம், 7, 48.)

போதாயனர், பரத்வாஜர் முதலியவர்கள் செய்த ராமாயணம் இப்பொழுது பூர்ணமாய்க்கிடைக்கவில்லை.

ஆனந்தராமாயணம். i.

பார்வதிக்குப் பரமேச்வரன் உபதேசித்தது. ஸாரகாண்டம், யாத்ராகாண்டம், யாககாண்டம், விலாஸகாண்டம், ஜன்மகாண்டம், விவாஹகாண்டம், ராஜ்யகாண்டம், மனோஹரகாண்டம், பூர்ணகாண்டம் என்ற ஒன்பது காண்டங்களுள்ளது. ஸர்க்கங்கள் 109 ; ச்லோகங்கள் 12,252. ஸாரகாண்டத்தில் வால்மீகிராமாயணத்தில் சொல்லப்பட்ட சரிதங்களும் ; யாத்ராகாண்டத்தில் ராமனுடைய தீர்த்தயாத்ரைகளும் ; யாககாண்டத்தில ராமன் செய்த அச்வமேதயாகமும், ராமனுடைய நூற்றெட்டுத் திருநாம (அஷ்டோத்தரசதம்)ங்களும் ; விலாஸகாண்டத்தில் ராமன் அயோத்யாநகரத்தில் ராஜ்யபாரஞ்செய்ததும், ராமஸ்தவராஜமும் ; ஜன்மகாண்டத்தில் ராமரக்ஷையும, ஸீதையைக்காட்டிற்கனுப்பினதும், குசலவர்களின் பிறப்பும, குசலவர்களுடன் ராமன் யுத்தஞ்செயததும, ஸீதையைத்திரும்பி வரவழைத்துக் கொண்டதும் ; விவாஹகாண்டத்தில குசலவர்களுடைய விவாஹமும் ; ராஜ்யகாண்டத்தில் மூலகாஸுரவதமும, ராமன் எழுத்வீபங்களடங்கிய பூமியை ஜயித்ததும், ராமனுடைய ஆயிரத்தெட்டுத்திருநாமங்களும (அஷ்டோத்ரஸஹஸ்ரம்), வால்மீகியின் பூர்வசரித்ரமும் ; மனோஹரகாண்டததில் லகுராமாயணமும், ராமனுடைய பூஜை, உபாஸனை முதலியவைகளின் விதியும், ராமதோபத்ரசக்ரமும், லக்ஷம் ராமநாமம் செய்து லங்கவிருதத்தை உத்யாபனஞ்செய்யும் விதியும், ஆஞ்சநேயர், ஸீதை, லக்ஷ்மணர், பரதர், சத்ருக்னர் இவர்களுடைய கவசமும், ஹனுமத்பதாகையும், ஆனந்த ராமாயண கதாஸாரமும் ; பூர்ணகாண்டததில ராமனுக்கும் சந்த்ரவம்சத்து ராஜாக்களுக்கும் நடந்த யுத்தமும் வர்ணிக்கப்பட்டிருக்கின்றன. இது வால்மீகியினால் சொல்லப்பட்ட சதகோடிராமாயணத்திலடங்கியது.

அத்யாத்மராமாயணம். ii.

வால்மீகிமஹர்ஷியாலாவது, வேதவ்யாஸமஹர்ஷியாலாவது சொல்லப்பட்டதல்ல. இது ப்ரஹ்மாண்டபுராணத்திலடங்கியதென்று சிலர் சொல்லுகிறார்கள். (அச்சிட்டிருக்கிற புஸ்தகங்களிலுமப்படியே கண்டிருக்கிறது.) இது ப்ரஹ்மாண்டபுராணத்திற் சேர்ந்ததல்ல. அது வாயுவாற்சொல்லப்பட்டது. அத்யாத்மராமாயணமோ விச்வாமித்ரமஹர்ஷியாற் சொல்லப்பட்டது. ஆனால், அத்யாத்மராமாயணத்திற்குக் கர்த்தா இன்னாரென்று பவிஷ்ய

புராணம் சொல்லுகிறபடியால், இது ப்ரஹ்மாண்டபுராணத்திற் சேர்ந்ததல்லவென்பது நிச்சயம்.

பவிஷ்யபுராணம், 3. 19-ல், "தேவனான சங்கரர், ராமானந்தருக்கு இவ்விதமாய் வரங்கொடுத்து மறைந்தார். (பிறகு ராமாநந்தர்) கிருஷ்ணசைதந்யஸ்வரூபியாயிருக்கிறவரையடைந்து, பன்னிரண்டு வர்ஷகாலம் பயோவ்ரதத்தை யநுஷ்டித்து, அவருக்குச்சிஷ்யனாய், கிருஷ்ணசைதந்யத்தைப் பூஜித்துக்கொண்டு, அவரிடத்திலேயே யிருந்தார். அவருடைய ஆக்ஞையால் மங்களகரமான அத்யாத்மராமாயணத்தைச் செய்தார" என்ற வாக்யங்களால் பரமேச்வரருடைய வரம், கிருஷ்ணசைதந்யருடைய ஆக்ஞை இவைகளால் அத்யாத்மராமாயணத்தை ராமாநந்தர் செய்ததாகத்தெரியவருகிறது. புராணோக்தமானதால் இது கற்பனையென்று சொல்லக்கூடியதல்ல. இந்த ராமாயணத்தில் விஷ்ணு அவதாரமாகிய ஸ்ரீராமருடைய சரித்ரமும், அநேக ஆத்மதத்வவிஷயங்களும் பார்வதிக்குப் பரமேச்வரருபதேசித்ததாகச்சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால், வேதம் முதலிய மற்ற ப்ரமாணங்களுக்கு விரோதமில்லாதபொழுது இதுவும் ப்ரமாணமாகக் கொள்ளத்தக்கதே.

அத்புதராமாயணம். iii.

வால்மீகிமஹர்ஷியால் தனது சிஷ்யராகிய பரத்வாஜருக்கு உபதேசிக்கப்பட்டது. இதில் அத்யாயங்கள் 27. இதைச்செய்தவர் வால்மீகிமஹர்ஷி. இதில் ஸீதையின் மாஹாத்ம்யம், ராமன், ஸீதை இவர்களுடைய அவதாரத்திற்குக் காரணங்கள், ஸஹஸ்ரமுக (ஆயிரந்தலை) ராவணனுடைய சரித்ரம் முதலிய அத்புதகதைகள் சொலலப்பட்டிருக்கின்றன.

அக்னிவேச்யராமாயணம். iv.

இதில் ராமாயணத்தில் நடந்த விஷயங்களின் காலக்ரமத்தைக்குறிப்பிடும் சில ச்லோகங்கள் மாத்ரம் எனக்குக் கிடைத்தன.

ஸங்க்ரஹராமாயணம். v.

நாராயணபண்டிதரால் செய்யப்பட்டது.

யோகவாஸிஷ்ட ராமாயணம். vi.

வஸிஷ்டமஹர்ஷி தசரதருடைய ஸதஸில் ராமனுக்கு ப்ரஹ்மவித்யையை யுபதேசம் செய்ததை வால்மீகி பரத்வாஜருக்குச் சொன்னது. இது விசேஷமாக அத்வைதமதரீதியாயிருக்கும்.

புராணங்கள். vii.

ஒவ்வொன்றிலும் ராமசரித்ரம் சுருக்கமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது; பாத்மபுராணத்தில பூர்வகல்பத்தில் நடந்த ராமாவதாரத்தையும் வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

ரகுவம்சம். viii.

காளிதாஸகவியால் செய்யப்பட்டது; 19 ஸர்க்கங்களுள்ளது. இதில் ஸூர்யவம்சத்து சக்ரவர்த்திகளில் திலீபன் முதல் அக்னிவர்ணன் வரையிலுள்ள ராஜாக்களுடைய சரித்ரங்கள் வர்ணிக்கப்பட்டிருக்கின்றன.

பட்டிகாவ்யம். ix.

பலபிநகரத்தில் ஆண்டுவந்த தரஸேனமஹாராஜாவினுடைய காலத்தில் வஸித்த பட்டிகவியால் செய்யப்பட்டது; 22 ஸர்க்கங்களுள்ளது. ஒவ்வொரு ஸர்க்கத்திலும் ஒவ்வொரு வ்யாகரணப்ரயோகத்தை விளக்கும் பதங்கள் உபயோகிகப்பட்டிருக்கின்றன.

மந்த்ரராமாயணம். x.

லக்ஷமணார்யரால் செய்யப்பட்டது. ராமசரிதத்தில் முக்யமான விஷயங்கள் ரிக்வேதத்தில் சொல்லப்பட்டிருக்கின்றனவென்றும், அந்த மந்த்ரங்களை ராமாயணபரமாக அர்த்தஞ் செய்யக்கூடுமென்றும், 156 மந்த்ரங்களையெடுத்து அப்படி அர்த்தஞ்செய்திருக்கிறார். இது வெகு அபூர்வக்ரந்தம்.

கம்பராமாயணம். xi.

வரகவியாகிய கம்பநாட்டாழ்வார் பாடியது. அவர் அநேக ராமாயணங்களையும் புராணங்களையும் பரிசோதித்து, அவைகளிலுள்ள முக்யமான விஷயங்களெல்லாவற்றையும் தன்னுடைய க்ரந்தத்தில் வர்ணித்திருக்கிறார்.

ராமசரித்ரமானஸம். xii.

ஹிந்திபாஷையில் ஏழுகாண்டங்களாக எழுதப்பட்டிருக்கிறது. அதில் பாலகாண்டம் மிகவும் பெரியது. உத்தரகாண்டத்தில் புஸுண்டருடைய உபாக்யானமும், பக்தியின் லக்ஷணமும் சொல்லப்பட்டிருக்கிறது. இதையெழுதினவர் துளஸீதாஸர்; இவர் ஆத்மாராமருடைய புத்ரர்; ஹஸ்தினாபுரத்தில் கிறிஸ்து 1575-வது வர்ஷத்தில் பிறந்தார். விசேஷமாய்க் காசி பட்டணத்தில் வஸித்தவர்; டில்லியில் ஆண்டுவந்த ஷாஜஹான் சக்ரவர்த்தியால் ஆதரிக்கப்பட்டவர்; 1624-ம் வர்ஷத்தில் பரலோகம் சேர்ந்தார். இவருக்கு ராமசரித்ரம் பின்வருமாறு கிடைத்ததாகச் சொல்லப்படுகிறது. பூர்வகல்பத்தில் ஒருகலியுகத்தில் கோஸலதேசத்தில் ஒருசூத்ரனிருந்தான். அவன் வீரசைவன்; இதரமதஸ்தர்களைத் தூஷிப்பவன். ஒருஸமயத்தில் தானிருக்கும் தேசத்தில் பஞ்சம் வ்யாபிக்க அதை விட்டு உஜ்ஜயினிக்குச்சென்றான். அங்கே தாராளமான மனதையுடைய ஓர் சிவபக்தர் இவனைக்கண்டு இரக்கங்கொண்டு, பரமசிவனுடைய நிஜஸ்வரூபத்தையும், ஸகல மதங்களும் ஸமமென்பதையும் உபதேசித்தார். ஆனால் அவனுடைய பூர்வகர்மவசத்தால் அவனுக்கு மதத்தில் வீராவேசம் தினம் தினம் அதிகரித்து, முடிவில் தனக்கு ஹிதத்தை யுபதேசம் செய்த குருவை அவமதித்துத் தூஷிக்க ஆரம்பித்தான். ஒருநாள் சிவாலயத்தில் பகவானை த்யானம்செய்துகொண்டிருக்கையில் அவனுடைய குரு அங்கே வர, அவரை மர்யாதை செய்யாமல் கர்வத்துடன் உட்கார்ந்திருந்தான். மஹா கருணையைப்பொருந்திய குரு அதைக்கவனிக்கவேயில்லை. ஆனால் பரமசிவன் தனது பக்தர்களுக்குச்செய்த அபசாரத்தைப் பொறுப்பாரா? "நீ ஒரு பெரிய ஸர்ப்பமாகக்கடவாய்" என்று அத்துஷ்டனைச்சபித்தார். உடனே அவனுடைய குரு பரமசிவனைப்ப்ரார்த்தித்து அந்தசாபத்தை மாற்றும்படி வேண்டிக்கொண்டார். பகவானும் கோபந்தணிந்து "என் வார்த்தை பொய்யாகாது. ஆனால் இவனுக்கு ஜனனமரணங்களால் உண்டாகும் புத்திமயக்கமிராது. எவ்விடத்திற்கும் தடையில்லாமற்போகும் சக்தியையும், பூர்வஜன்மஞானத்தையும் அனுக்ரஹம் செய்கிறேன்" என்றார். அப்படியே அவன் பரமராமபக்தனாய் அநேக ஜன்மங்களெடுத்தான். ஒருதடவை ப்ராஹ்மணனாயிருக்கும்போது ராமபக்திமேலிட்டு, மேருமலைக்குச்சென்று, அங்கே லோமசர் என்ற மஹர்ஷியைக்கண்டு, நமஸ்கரித்து, "ஸ்வாமி! எனக்குத்தத்வோபதேசம் செய்யவேண்டும்" என்று ப்ரார்த்

சித்தான். அவர் நிர்குணப்ரஹ்மத்தின் ஸ்வரூபத்தை உபதே சிக்க, அவனை ஸகுணரூபமான ராமமூர்த்தியின் தத்வத்தை உப தேசிக்கவேண்டுமென்று அடிக்கடி ப்ரார்த்தித்தான். அவனு டைய பிடிவாதத்தாலும், பக்திக்குறைவாலும், லோமசர் கோ பங்கொண்டு, "நீ காக்கையாகக்கடவாய்" என்று சபித்தார்; ஆனால் காமக்ரோதங்களை ஜயித்த அந்தப்ராஹ்மணன் மிகுந்த ஸந்தோஷத்துடன் அந்தச்சாபத்தை அங்கீகரித்தான். லோமசர் கிருபைசெய்து அவனுக்கு ராமமூர்த்தியின் தத்வத்தை உபதே சித்து, ராமசரித்ரமானஸத்தைச்சொன்னார். அதுமுதல் தீர்க் காயுளையும், பூர்ணஞானத்தையும், கலங்காத ராமபக்தியையும் அடைந்தான். அவர்தான் காக்கைரூபமான புஸுண்டயோகி.

ராமன் இந்த்ரஜித்தினுடைய நாகபாசத்தால் கட்டுப்பட்ட பொழுது அவரை விடுவிக்கும்படி கருடனை நாரதர் அனுப்பினார். கருடனுக்கு "ராமன் பரப்ரஹ்மஸ்வரூபியாயிருந்தால் சத்ரு வால் ஜயிக்கப்படுவானேன்" என்று ஸந்தேஹமுண்டாயிற்று. அதைத் தீர்க்கும்படி நாரதரை ப்ரார்த்திக்க, அவர் கருடனை ப்ரஹ்மாவிடத்திற்கும், ப்ரஹ்மா பரமசிவனிடத்திற்கும, பரம சிவன் புஸுண்டரிடத்திற்குமனுப்பினார். அப்பொழுது புஸு ண்டர் கருடனுக்கு ராமசரித்ரமானஸத்தையுபதேசித்துப் பக வானுடைய மாயையையும் லீலைகளையும தெரிவித்தார்.

ஒரு ஸமயத்தில் பரமசிவன் பவானியுடன் அகஸ்த்யருடைய ஆச்ரமத்திற்குச்சென்றார். அப்பொழுது அகஸ்த்யர் ராமசரித் ரத்தை அவர்களுக்கு விஸ்தாரமாக வர்ணித்தார். மஹாதேவன் மிகவும் ஸந்தோஷித்து பகவானுடைய நிஜஸ்வரூபத்தை அவரு க்கு அனுக்ரஹித்தார். சிலகாலங்கழித்து ராமன் பூமியில் அவதா ரஞ்செய்து தண்டகாவனத்தில் ஸீதையையிழந்து, அவளைத்தே டிக்கொண்டிருந்தார். அப்பொழுது பரமசிவன் அவரைத்தர் சிக்கவேண்டுமென்று பலமுறை ப்ரயத்தனம் செய்தும் ஸரியான ஸமயம் நேரவில்லை. பிறகு பவானியுடன் அங்கே சென்று அவ ரைத்தர்சித்து அடங்காத ஆனந்தமடைந்தார். அப்பொழுது பவானிக்கு, "ஸாதாரணமனுஷ்யன்போல் ஸீதை அபஹரிக்கப் பட்டதைப்பற்றிப்ரலாபித்தும இவர்தானா ராமன்? பரமசிவன் பூஜிப்பவர் இவராயிருக்கமுடியுமா? அகஸ்த்யரால் வர்ணிக்கப் பட்டவர் இவரா?" யென்று பெரிய ஸந்தேஹமுண்டாயிற்று. பர மசிவன் எவ்வளவு தடவை ராமனுடைய தத்வத்தை அவளுக்குப தேசித்தும், "அவை யெல்லாம் பகவானுடைய மாயையே; மனு ஷ்ய பாவனையாய் அவர் செய்யும் லீலைகளே" என்று உறுதி சொல்லி

யும் அவளுக்கு ஸந்தேஹந்தீராமல் ஒரே பிடிவாதமாயிருந்தாள். அப்பொழுது பரமசிவன் "நான் இங்கேயிருக்கிறேன், நீ போய் ராமனைப்பரீக்ஷை செய்து உனது ஸந்தேஹத்தைத் தீர்த்துக்கொண்டுவா" வென்றார். பவானியும் ஸீதையினுடைய ரூபத்தைத்தரித்து ராமன் போகும் வழியில் நின்றாள். லக்ஷ்மணர் அந்தமாயையைக்கண்டுபிடிக்க முடியவில்லை. ஆனால் ராமன் பவானியைப்பெயரைச்சொல்லியழைத்து "மஹாதேவரெங்கே? அவரை விட்டு நீ ஏன் இந்த வனத்தில் ஒண்டியாய்த் திரிகிறாய்" என்றார். பார்வதியும் வெட்கமடைந்து, மனதில் பயமும் துக்கமுங்கொண்டு, பரமசிவனிருக்குமிடம் வந்து சேர்ந்தாள். அப்பொழுது ராமன் தனது மஹிமையை வெளிப்படுத்தப், பார்வதி எந்தப்புறம் திரும்பினாலும் அநேகம் ராமர்கள், லக்ஷ்மணர்கள், ஸீதைகள், தேவதைகளாலும், ரிஷிகளாலும், த்ரிமூர்த்திகளாலும் பூஜிக்கப்பட்டுக் காணப்பட்டார்கள். திரும்பிப் பார்க்கையில் எல்லாம மறைந்தன. பரமசிவனிருக்குமிடம் வந்தபொழுது, அவர், "ராமனை எவ்விதமாய்ப்பரீக்ஷித்தாய்" என்றார். அவள், "நான் யாதொரு பரீக்ஷையும் செய்யவில்லை. தாங்கள் சொன்ன காரணங்களால் என் மனதிலுள்ள ஸந்தேஹம் நீங்கிற்று" என்றாள். ஆனால் பரமசிவன் ராமமூர்த்தியின் மாயையால் அவள் வாக்கிலிருந்து வந்த பொய்யைத்தெரிந்துகொண்டு, "எனது தாயான ஸீதையின் ரூபத்தைப் பவானி தரித்தபடியால், அவளை இந்த ஜன்மத்தில் எனது பத்னியாக நான் எண்ணமாட்டேன்" என்று கடினமான ப்ரதிக்ஞை செய்ய, ஸகல தேவதைகளும் அவரைக் கொண்டாடினார்கள். சிலகாலத்திற்குப்பிறகு பார்வதி இதையறிந்து பரமசிவனை ப்ரார்த்திக்க, அவரும் யோகஸமாதியிலிருந்தபடியால் மறுமொழி சொல்லவில்லை. அப்படி மிகுந்த வருத்தத்தை அனுபவித்துக்கொண்டு, அந்தத் தேஹத்தை விடமுடியாமல் 87,000 வர்ஷங்கள் ஜீவித்தாள். பிறகு பரமசிவன் ஸமாதியிலிருந்து எழுந்து ராமமூர்த்தியின் நாமங்களையுச்சரிக்க வாரம்பித்தார்.

தக்ஷயக்ஞமும், பரமசிவனையவமானஞ்செய்ததும், பார்வதி தன் தேஹத்தை விட்டதும், திரும்பவும் ஹிமவானுடைய புத்ரியாகப்பிறந்ததும், பரமசிவனையே பர்த்தாவாக அடையவேண்டுமென்று தபஸ் செய்ததும், பரமசிவனை விவாஹம்செய்துகொண்டதும், காமனையெரித்ததும், கார்த்திகேயருடைய உத்பத்தியும் பிறகு க்ரமமாய் நடந்தன. ஒருநாள் பார்வதி பரமசிவனை நோக்கி ராமமூர்த்தியைக்குறித்துமுன் கேட்ட ஸந்தேஹத்தை

யே திரும்பவும் கேட்டாள். அப்பொழுது பரமசிவன், புஸுண்டர் கருடனுக்குபதேசித்தப்ரகாரம், அவளுக்கு ராமசரித்ரத்தை யுபதேசித்தார். புஸுண்டரிடத்திலிருந்து யாக்ஞவல்க்யரும், அவரிடத்திலிருந்து பரத்வாஜரும், அவருடைய சிஷ்யர்களிடத்திலிருந்து துளஸீதாஸரும் அதைப்பெற்றார்கள்.

ஜைனராமாயணம். xiii.

இது ஹேமசந்த்ராசார்யர் என்ற ஜைனமதஸ்தரால் செய்யப்பட்ட த்ரிஷஷ்டிசலாகபுருஷசரித்ரம் என்ற க்ரந்தத்தில், 7-வது பாகம் 10-வது அத்யாயம். இது வால்மீகிராமாயணத்தின் கதையிலிருந்து ஏறக்குறைய முற்றும் மாறியிருப்பதால் இங்கே சுருக்கமாக எழுதப்படுகிறது.

ஜம்பூத்வீபத்தின் தக்ஷிணபாகத்தில், பரதகண்டத்தில், விநீதமென்ற பட்டணத்தில் இக்ஷ்வாகு வம்சத்தரசனாகிய ஸகரனென்றொருவனிருந்தான். அவன் எப்பொழுதும் வேட்டையிலேயே ப்ரியமுள்ளவனாய்த் தன்னுடைய ராஜ்யகார்யங்களைக்கவனியாமலிருந்தான். ஒருநாள் வேட்டையாடும்பொழுது காட்டில் வெகுதூரம் ஒருமிருகத்தைத் துரத்திக்கொண்டுபோய்த் தன்னுடைய குதிரை தனக்கடங்காமல், தானிதுவரையிலும் பார்த்திராத ஒருகாட்டில் போகையில் குதிரை ச்ரமத்தால் கீழே வீழ்ந்திறந்தது. ஸகரனும் மிகவும் களைத்து ச்ரமபரிஹாரம் செய்துகொள்ள ஓரிடத்தைத்தேடிக்கொண்டுபோய், கடைசியில் அடர்ந்த மரங்களால் சூழப்பட்ட ஒரு அழகான ஏரிக்கரையில் வந்தான். சற்றுதூரத்தில் அதிரூபலாவண்யமுள்ள ஒரு யௌவன ஸ்த்ரீயைக்கண்டு, அவளுடைய அழகையும், காந்தியையும், மேன்மையையும் பார்த்துப்ரமித்து, ஒன்றும் தோன்றாமல் நின்றுகொண்டிருந்தான். அவளும் ஸகரனைப்பார்த்தவுடனே அவன்மேல் ஆசைப்பட்டு அவனைப்போலவே தானும் திகைத்து நின்றாள். இப்படியிருக்கையில் யாரோ ஒருவர் ஸமீபத்திலிருந்து கூப்பிட அவள் அந்த மரச்சோலையில் திடீரென்று மறைந்தாள். ஸகரன் அவளுடைய ஞாபகத்தால் தன்னை மறந்து ஆனந்தத்தில்மூழ்கிப்பிறகு கண்ணைத்திறந்துபார்க்க, எதிரில் ப்ரபுவின் வேலைக்காரனுடைய உடையைத்தரித்த ஒரு வயஸ்சென்றவன் நிற்கக்கண்டான். அவனும் அரசனை நோக்கி, "ஸ்வாமி! நான் தங்களிடத்தில் ஒரு ஸமாசாரஞ்சொல்ல வந்திருக்கிறேன்; தயை செய்து கேட்கவேண்டும். வைதத்யம் என்ற மலைக்கருகில், கனவல்லபமென்ற பட்டணத்தில் வித்யாதரவம்சத்தில் பிற

ந்த ஸுலோசனன் என்ற ஓர் அரசனிருந்தான்; அவனுக்கு ஸஹஸ்ரநேத்ரனென்ற புத்ரனும், ஸுகேசி என்ற புத்ரியும் பிறந்தார்கள். அதே வம்சத்தில் பிறந்த ரதனபுரத்தரசனாகிய பூர்ணமேகனென்பவன் ஸுகேசியை விவாஹஞ்செய்ய விரும்பினான். ஆனால் ஸுலோசனன் அதற்கு ஸம்மதிக்காததால், அவனை யுத்தத்திலகொன்று அவனுடைய ராஜ்யத்தைக் கைப்பற்றிக் கொண்டான். பிறகு ஸஹஸ்ரநேத்ரனும், ஸுகேசியும், அந்தத் தேசத்திலிருந்து தப்பித்து இந்த வனத்தில் மாறுவேஷத்துடன் வெகுகாலமாய்ச் சக்ரபாணியென்ற தேவதையால் காப்பாற்றப்பட்டு வஸித்துவருகிறார்கள். ஸுகேசி தங்களை அகஸ்மாத்தாய் ஸந்தித்துத்தங்களிடத்தில் ப்ரேமைகொண்டு தங்களை விவாஹஞ்செய்ய விரும்புகிறாள். அவளுடைய ஸஹோதரனும், வெகு ஸந்தோஷத்துடன் ஸம்மதித்துத்தங்களைத்தன்னுடைய இருப்பிடத்திற்கு வரும்படி ப்ரார்த்திக்கிறார்'' என்றான். ஸகர மஹாராஜனும் அப்படியே செய்தார். சீக்ரத்தில் அவ்விருவர்களுக்கும் விவாஹம் நடந்தது. பிறகு ஸகரன் தனது நகரத்திலிருந்து ஒரு பெரிய ஸைன்யத்தை வரவழைத்துப்பூர்ணமேகனை ஜயித்துத்தன் மைத்துனனான ஸஹஸ்ரநேத்ரனை ரதனபுரத்தரசனாகச்செய்தான்.

சிலகாலங்கழித்து அவ்விருவர்களும் ஸாகேதபுரத்திற்கருகிலுள்ள ஒரு தோட்டத்திலிருக்கும் ஜினேச்வராருடைய ஆலயத்திற்கு யாத்ரைசெய்தார்கள். அங்கே ஸஹஸ்ரநேத்ரன் தன் பிதாவைக்கொன்ற பூர்ணமேகனையும், அவனுடைய புத்ரன் கனவாஹனனையுங்கண்டு அடங்காத கோபங்கொண்டு, பூர்ணமேகனைக்கொன்று கனவாஹனனையுங்கொல்லயத்னிக்கையில் ஜினேச்வரர் தடுத்தார். அதைக்கண்டு ஸகரன் ஜினேச்வரரைப்ப்ரார்த்தித்து, ''ஸ்வாமி! பூர்ணமேகனுக்கும ஸுலோசனனுக்கும, கனவாஹனனுக்கும் ஸஹஸ்ரநேத்ரனுக்கும் இவ்வளவுத்வேஷம் உண்டாவதற்கும், எனக்கும் ஸஹஸ்ரநேத்ரனுக்கும் இவ்வளவு ஸ்நேஹமேற்படுவதற்குங்காரணமென்ன?'' வென்று கேட்டான்.

அதற்கு ஜினேந்த்ரஸ்வாமி பின்வருமாறு சொல்லத்தொடங்கினார்.

''ஆதித்யபுரத்தில் பவனனென்னும் ஓர் வைச்யன் இருந்தான். அவனுக்கு ஹரிதாஸனென்று ஓர் புத்ரனுண்டு. ஒருக்கால் பவனன் வ்யாபாரநிமித்தமாயத்தேசாந்த்ரம் சென்றான். அங்கே வெகுகாலமிருந்து பிறகு தனது பந்துக்களைப்பார்க்கவேண்டுமென்ற ஆசை அதிகமாய், அவ்விடம் விட்டுப்புறப்பட்டுத்தி

ரும்பிவந்து தன்னுடன்வந்தவர்களைப்பின்விட்டுப்பாதிராத்திரிவேளையில் தன் வீடுவந்து சேர்ந்தான். வீட்டுக்கதவைப்படபடவென்று யாரோ இடித்த சப்தத்தைக்கேட்டு, ஹரிதாஸன் தூக்கத்திலிருந்து திடீரென்று விழித்துக்கொண்டு, கதவைத்திறந்து, கொள்ளைக்காரர்கள் வந்துவிட்டார்களென்று கோபித்து, எதிரில் நின்றவன் இன்னானென்று பாராமல் அடித்துக்கொன்றான். அவர்களே மறு ஜன்மத்தில் பூர்ணமேகன், ஸுலோசனன் என்று பிறந்தார்கள். அவர்களுடைய விரோதத்திற்கு இதுதான் காரணம்.

"பூர்வஜன்மத்தில் நீ ஓர் ஸன்யாஸி; உனக்கு சசி, அவலீ என்று இரண்டு சிஷ்யர்கள் இருந்தார்கள். அவர்களில சசி என்பவன் அவலீ என்பவனோடு சண்டைபோட்டுககோபவெறியால அவனைக்கொன்றான். அவர்களே இந்த ஜன்மத்தில் கனவாஹனன், ஸஹஸ்ரநேத்ரன் என்று பிறந்து, இப்பொழுதும்சத்ருக்களாயிருக்கிறார்கள். முன்பு அவலீ என்பவன் உனக்கு ப்ரிய சிஷ்யன்; அவனே இப்பொழுதும் உன் ஸ்நேஹிதனாக வந்திருக்கிறான்" என்றார்.

அப்பொழுது அதில ஸம்பந்தப்பட்ட எல்லோரும வெகு ஆச்சரியத்துடன் அந்தக்கதையைக்கேட்டுக்கொண்டிருந்தார்கள். அங்கிருந்த காவற்காரர்களில் ஒருவனாகிய ராக்ஷஸவம்சத்திற பிறந்த பீமன் மற்றவர்களைக்காட்டிலும் அதிக கவனத்துடன் அதைக்கேட்டுக்கொண்டிருந்தான். முடிந்தவுடன் திடீரென்று எழுந்திருந்து, கனவாஹனன் இருக்குமிடத்திற்கு ஓடி, அவனைப்ரியத்துடன் ஆலிங்கனஞ்செய்துகொண்டு "என்னுடைய பூர்வஜன்மத்தில நான் வித்யுத்கேத்ரன் என்ற காஞ்சனபுரத்தரசன்; நீ, ரதிவல்லபன் என்ற எனது புத்ரன். நான் சீக்ரத்தில் இந்தத்தேஹத்தை விட்டுவிடுவேனென்று எனக்குத்தோன்றுகிறது; என்னிடத்திலிருக்கிற நவரத்னமாலையையும், நான் கற்ற மாயாவித்யையையும் பெற்றுக்கொள். உன்னை ராக்ஷஸ த்வீபத்திலிருக்கும் லங்காபட்டணத்திற்கும், பூமியின்கீழ் ஆறு யோஜனை தூரத்திலிருக்கும் பாதாளலங்காபட்டணத்திற்கும் அரசனாகச்செய்திருக்கிறேன். நீ க்ஷேமமாக ராக்ஷஸ வம்சத்தைப்பெருமைப்படுத்திக்கொண்டிருக்கக்கடவாய்" என்றான். அப்படியே கனவாஹனன், ராக்ஷஸத்வீபத்திற்கு அதிபதியாய் லங்கையை ராஜதானியாகச்செய்துகொண்டு ராஜ்யபாலனம் செய்துவந்தான்.

அவனுடைய புத்ரன் மஹாராக்ஷஸன்; அவனுடைய புத்ரன் தேவராக்ஷஸன்; அவனுடைய புத்ரன் கீர்த்திதவளன்.

அவன் வித்யாதரகுலத்திற்பிறந்த வைதத்யாநகரத்திற்கரசனாகிய அதீந்த்ரனுடைய குமாரனான ஸ்ரீகாந்தன் புத்ரிதேவி என்பவளை விவாஹஞ்செய்தான். அவனுடைய குமாரர்களில் தடித்கேசன் அவனுக்குப்பிறகு ராக்ஷஸத்வீபத்திற்கு அதிபதியாயிருந்தான்.

வித்யாதரகுலத்திற்பிறந்த புஷ்பபோத்தரன் என்ற ரதனபுரத்தரசன், முன்சொன்ன தேவி என்பவளைத்தனது புத்ரனாகிய பத்மோத்தரனுக்கு விவாஹஞ்செய்ய உத்தேசித்து, அவளுடைய தகப்பன் ஸம்மதிக்காததால அவளை எப்படியாவது நாசம் செய்யவேண்டுமென்று ஸமயம் பார்த்துக்கொண்டிருந்தான். இப்படியிருக்கையில், ஸ்ரீகாந்தன் புஷ்பபோத்தரனுடைய பெண்ணாகிய பத்மா தன்னிடத்தில ப்ரீதிவைத்திருப்பதையறிந்து, அவளைத்தன் விமானத்தில் ஒருவருக்குந்தெரியாமல கொண்டு போய்விட்டான். இதைக்கேட்டுப்புஷ்பபோத்தரன் வெகு கோபங்கொண்டு ஸ்ரீகாந்தனைக்கொல்வதற்காக வேகமாய்ப்பின்தொடர்ந்தான். அப்பொழுது ராக்ஷஸராஜனான கீர்த்திதவளன் அவ்விருவர்க்கும ஸமாதானஞ்செய்துவைத்தான். பிறகு அவர்கள் மிகவும் அன்யோன்யமாய், புஷ்பபோத்தரன் ஸ்ரீகாந்தனை வானரத்வீபத்திற்கதிபதியாக நியமித்தான். ஸ்ரீகாந்தன் கிஷ்கிந்த நகரத்தைக்கட்டி அதில் ராஜ்யபாலனஞ்செய்துவந்தான். அவன் புத்ரன் வஜ்ரகாந்தன்; அவன்புத்ரன் ததிரதன்.

ஒருக்கால தடித்கேசனுடைய பார்யை ஸ்ரீசந்த்ரா, தன் புருஷனும் தானும விமானத்திலேறி வேடிக்கையாக யாத்ரை செய்யவேண்டுமென்று அவனைக் கேட்டுக்கொண்டாள். அப்படியே அவர்கள் வானரத்வீபத்திற்குச்சென்று, அங்கே ஒரு மனோஹரமான ஸ்தலத்தில வஸித்துக்கொண்டிருக்கையில், ஒரு வானரன் ஸ்ரீசந்த்ராவைத்தன்னுடைய நகங்களால கீறிக்காயப்படுத்தினான். அதைக்கண்டு தடித்கேசன் கோபங்கொண்டு அவனைக்கொன்றான். உடனே ஜீவஹிம்ஸை செய்ததைப்பற்றி மிகவும் வருத்தமடைந்து, அங்கே ஸஞ்சரித்துக்கொண்டிருந்த ஓர் ஸன்யாஸியை அதற்குக் காரணத்தைக்கேட்க, அவருடைய உபதேசத்தால் ஸம்ஸாரவாழ்க்கையில் மனம்வெறுத்துத் தனது புத்ரனான ஸுகேசனை ராஜ்யத்தில பட்டாபிஷேகம்செய்துவைத்து ஸன்யாஸங்கொண்டான். வானரத்வீபத்திற்கதிபதியான ததிரதனும் இதைப்போன்ற காரணங்களால் மனம்வெறுத்துக்கிஷ்கிந்தன் என்ற தனது புத்ரனிடத்தில் ராஜ்யத்தை ஒப்புவித்து ஸன்யாஸங்கொண்டான்.

அப்போது ஆதித்யபுரத்தரசனாகிய மந்திரமாலி என்பவனுடைய பட்டணத்தில், ஓர் ஸ்வயம்வரம் நடந்தது. அப்பொழுது அவனுடைய புத்ரியாகிய ஸ்ரீமாலா என்பவள், வானரத்வீபத்தின் அதிபதியான கிஷ்கிந்தனைத் தனக்குப்பாத்தாவாக உத்தேசித்து அவன் கழுத்தில் புஷ்பமாலையைப்போட்டாள். அதைக்கண்டு ரதனபுரத்தரசனாகிய அசனிவேகன் கோபங்கொண்டு, கிஷ்கிந்தனுடன் யுத்தஞ்செய்து, வானரத்வீபத்தைக் கைப்பற்றிக்கொண்டான். சிலகாலங்கழித்து ஸுகேசனை ராக்ஷஸத்வீபத்திலிருந்து துரத்திவிட, அவனும் கிஷ்கிந்தனும் பரிவாரங்களுடன் பாதாளலங்கைசென்று பயமில்லாமல் வஸித்துவந்தார்கள். அங்கே ஸுகேசனுடைய பார்யை இந்த்ராணி என்பவள் மாலி, ஸுமாலி, மால்யவந்தன் என்ற மூன்று குமாரர்களையும், கிஷ்கிந்தனுடைய பார்யையான ஸ்ரீமாலா, ஆதித்யரஜஸ், ரிக்ஷரஜஸ் என்ற இரண்டு புத்ரர்களையும பெற்றார்கள்.

மஹாபராக்ரமசாலியான மாலி, லங்காராஜ்யம ரதனபுரத்தரசனால் பிடிக்கப்பட்டதைத்தெரிந்து, அங்கேசென்று கடுமையான யுத்தஞ்செய்து, அவனை ஜயித்து லங்கையில அரசு செலுத்திவந்தான். பிறகு ரதனபுரத்தரசனை ஜயித்து அவனுடைய ராஜ்யத்தைக்கைபபற்றவேண்டுமென்ற எண்ணங்கொண்டு படையெடுத்துச்சென்றான். அக்காலத்தில் இந்த்ரனென்பவன் அங்கே ஆண்டுவந்தான். அவனுடைய தாய் சித்ரஸுந்தரி ஒரு தேவதையால் பிடிக்கப்பட்டு, தேவேந்த்ரனுடன் ஸம்போகஞ்செய்ய ஆசைகொண்டாள். அவளுடைய பர்த்தா அதையறிந்து, தேவேந்த்ரனுடைய ரூபத்தைத்தரித்து அவளைத்திருப்திசெய்தான். அவளுக்கு ஒரு புத்ரன் பிறக்க, அவனுக்கு இந்த்ரனென்று பெயரிட்டார்கள். அவன் தேவேந்த்ரனென்ற பெயர்பெற்றது போராமல், தனது வாஹனங்கள், ஆயுதங்கள், பரிவாரங்கள் யாவற்றிற்கும் தேவேந்த்ரனுடைய லோகத்தில் இருப்பதுபோலப்பெயரிட்டு இந்த்ரனைப்போலவே வெகு மேன்மையாய ஆண்டுவந்தான். இப்படியிருக்க, மாலி அவனுடன் யுத்தஞ்செய்து அவனால் கொல்லப்பட்டான். பிறகு இந்த்ரன், லங்காராஜ்யத்தை, விச்ரவஸிற்கும் அவன் பார்யை ஸம்சேகா என்பவளுக்கும் புத்ரனான வைசரவணன் என்ற தனது ஸ்நேஹிதனுக்குக் கொடுத்தான்.

மாலியின் ஸஹோதரர்களான ஸுமாலியும், மால்யவந்தனும பாதாளலங்கையில் ஒளிந்துகொண்டு ஸன்யாஸிகளானார்கள். ஸுமாலி எப்படியாவது ராக்ஷஸவம்சத்தை லங்கையில் விருத்திசெய்யவேண்டுமென்று உத்தேசித்து, வ்யோமபிந்து

வின் புத்ரி கேகஸியை விவாஹஞ்செய்தான். அவனுக்கு ரத்னச்ரவஸ், பானுகர்ணன் (கும்பகர்ணன்), விபீஷணன் என்ற மூன்று குமாரர்களும், சந்த்ரநகா (சூர்ப்பநகா) என்ற புத்ரியும் பிறந்தார்கள். அவர்கள் மஹாபலசாலிகளாயும், பராக்ரமமுள்ளவர்களாயும், பதினாறரைவில் ப்ரமாணம் உயரமுள்ளவர்களாயும் இருந்தார்கள்.

அவர்களில் மூத்தவனான ரத்னச்ரவஸ் தன் தகப்பனிடத்திலிருந்த ஒரு நவரத்னமாலையைக்கண்டு, அதை அலக்ஷ்யமாய் எடுத்துத்தனது கழுத்தில் தரித்துக்கொண்டான். அந்த மாலை ஒருவராலும் அசைக்கமுடியாதது ஆயிரம் மஹா நாகங்களால் காப்பாற்றப்பட்டது. ஸுமாலி அந்த ஆச்சர்யகரமான செய்கையைப்பார்த்துத் தனது புத்ரனுடைய முகம் அந்த மாலையிலுள்ள ஒன்பது ரத்னங்களிலும் ப்ரதிபலிக்கக்கண்டு, அவனுக்குத் தசமுகன் என்று பெயரிட்டான்.

ஒருக்கால் தசமுகன், தன்னுடைய முன்னோர்கள் அரசு செய்துவந்த லங்காராஜ்யம் சத்ருக்களால் கைப்பற்றப்பட்டதையும், தன் தகப்பன் அங்கிருந்து துரத்தப்பட்டு ஸந்யாஸியானதையும் தன் தாய் சொல்லக்கேட்டு, பீமாரண்யத்திற்குச் சென்று கடுமையான தபஸ்செய்தான். முடிவில் ஆயிரம் மாயாவித்யைகளைப்பெற்றுத் தனது ஸஹோதரர்களுக்கும் அவைகளை உபதேசித்தான்.

சிலகாலங்கழித்து வித்யாதர குலத்திற்பிறந்த மயன் புத்ரி மந்தோதரியை விவாஹஞ்செய்து இந்த்ரஜித் என்ற புத்ரனைப் பெற்றான். பிறகு ஆறாயிரம் கந்தர்வஸ்த்ரீகளையும் விவாஹஞ்செய்தான். வைச்ரவணனை ஜயித்துத்தனது முன்னோர்கள் ஆண்டுவந்த ராக்ஷஸத்வீபத்தைக்கைப்பற்றி விசேஷகீர்த்தியுடன் அரசு நடத்திவந்தான்.

இப்படியிருக்கையில் தனது முன்னோர்களின் மித்ரனான கிஷ்கிந்தனுடைய புத்ரர்கள் ரதனபுரத்தரசனான இந்த்ரன் வம்சத்திற்பிறந்த யமன் என்பவனால் நரகத்தில் தள்ளப்பட்டதைப் பவனவேகன் மூலமாய்க்கேள்விப்பட்டு, உடனே அங்கே சென்று அவர்களை விடுவித்து, இந்த்ரனை அவனுடைய ராஜ்யத்திலிருந்து துரத்தி, ஆதித்யராஜனைக் கிஷ்கிந்தனுடைய ராஜ்யத்திற்கதிபதியாகவும், ரிக்ஷராஜனை வானரத்வீபத்திலுள்ள ரிக்ஷபுரத்திற்கதிபதியாகவும் ஏற்படுத்தினான். ஆதித்யராஜன் இந்துமதியை விவாஹஞ்செய்து, வாலி, ஸுக்ரீவனென்ற குமாரர்களைப்பெற்றான். ரிக்ஷராஜன்

ஹரிகாந்தாவை விவாஹஞ்செய்து, நளன், நீலன் என்பவர்களைப் பெற்றான்.

ஒருக்கால் தசமுகன் வாலியின் பிரதாபத்தைக்கேள்விப் பட்டுத் தனது ஸைன்யங்களுடன் அவனுடன் யுத்தஞ்செய்யக் கிஷ்கிந்தைக்குச்சென்றான். யாதொரு காரணமில்லாமல் தன்னுடன் யுத்தஞ்செய்யவந்த தசமுகனை வாலி ஜயித்துச் சிறைச்சாலையில் அடைத்துவிட்டான். தசமுகன் தனது புத்திக்குறைவைப்பற்றி வருத்தப்பட்டு, வாலியை மிகவும் வணக்கமாய்ப் ப்ரார்த்திக்க, அவனும் இரங்கித் தசமுகனை விடுவித்தான். சில காலங்கழித்து வாலி மேருமலையில் தபஸ்செய்ய உத்தேசித்துத் தனது ஸஹோதரனான ஸுக்ரீவனிடத்தில் ராஜ்யத்தை ஒப்புவித்துச் சென்றான். ஸுக்ரீவனும் தனது புத்ரியாகிய ஸ்ரீப்ரபாவை தசமுகனுக்குப் பார்யையாகக்கொடுத்து விசேஷமர்யாதையுடன் அவனை லங்கைக்கனுப்பினான்.

வெகுகாலத்திற்குப்பிறகு தசமுகன் நித்யலோகத்திலிருக்கும் ரத்னவலி என்ற தேவஸ்திரீயினிடத்தில் ஆசைகொண்டு தனது விமானத்தில் செல்லுகையில், திடீரென்று அது தடைபட்டதைக்கண்டு கீழே பார்க்க, வாலி மேருமலையின் சிகரத்தில் தபஸ் செய்துகொண்டிருப்பதைக்கண்டான். தசமுகன், தன்னைத்தடுத்தவன் வாலியென்று நினைத்து, அந்தச்சிகரத்தை வேருடன் பிடுங்கயத்னித்தான். அதைக்கண்டு வாலி, புன்சிரிப்புடன், தனது கால்பெருவிரலால் அதை அழுத்தத் தசமுகனுடைய கை அதின் கீழே அகப்பட்டு, அநேக வர்ஷங்கள் அசையமுடியாமல் உபத்ரவத்தைப் பொறுக்காதவனாய்க் கதற, வாலி இரங்கி அவனை விடுவித்தான். அந்தக் காரணத்தால் அவனுக்கு "ராவணன்" என்று பெயர் கிடைத்தது. பிறகு ஜினஸ்வாமியைப்பூஜித்து, அவருடைய கிருபையால் தர்ண என்ற ஸர்ப்பத்தினிடத்திலிருந்து சக்தி என்ற வித்யையை அடைந்தான். பிறகு உலகத்திலுள்ள அரசர்கள் தனக்குக்கப்பங்கட்டவேண்டுமென்று உத்தேசித்து ஸுக்ரீவனுடன் சேர்ந்து திக்விஜயம் செய்யப் புறப்பட்டான். வழியில் நர்மதாநதிக்கரையில் இறங்கி, ஆற்றுமணலில் ஜினஸ்வாமியை விதிப்படி பூஜித்துக்கொண்டிருக்கையில், மாஹிஷ்மதீநகரத்தரசனான ஸஹஸ்ராம்சன் அந்த ஆற்றில் கட்டப்பட்டிருக்கும் அணையைத்திடீரென்று உடைத்துவிட, ஜலப்ரவாஹம் ராவணனுடைய பூஜாத்ரவ்யங்களை அடித்துக்கொண்டு போய்விட்டது. ராவணன் கோபங்கொண்டு, ஸஹஸ்ராம்சனைக் கட்டிச் சிறையில்வைத்தான். பிறகு அவனுடைய பிதா சத

பாகு என்ற முனிவர் வேண்டிக்கொண்டதால் அவனை விடுவித்தான். அந்த அவமானம் பொறுக்காமல் ஸஹஸ்ராம்சன் ராஜ்யத்தைத் தனது ஸ்னேஹிதனாகிய அரண்யராயனிடம் ஒப்புவித்து ஸன்யாஸியானான். அவனும் சிறிதுகாலத்திற்குப்பிறகு ராஜ்யத்தைத் தனது புத்ரனாகிய தசரதராயனிடத்தில் ஒப்புவித்து ஸந்யாஸம் பெற்றான்.

பிறகு ராவணன் திக்விஜயம்செய்துகொண்டுவருகையில் மருத்ராயன் என்ற அரசன் யாகம் செய்யுமிடத்திற்குவந்தான். அங்கே பலிகொடுப்பதற்கு அநேகம் பசுக்கள் கட்டப்பட்டிருப்பதைக் கண்டு, ஜீவஹிம்ஸை பாபமென்று எண்ணி, யாகத்தை நாசஞ்செய்தான். அவ்விடத்திற்குப் போகும்படி ராவணனைத்தூண்டிவிட்ட நாரதர் அந்த யாகம் அழிக்கப்பட்டதைப்பற்றி ஸந்தோஷித்து, யாகசாலையிலிருப்பவர்களைப்பார்த்து "முன்காலத்தில் க்ஷீரகதம்பர் என்று ஒரு ஆசார்யர் இருந்தார். நானும் சுக்திமதி என்ற ராஜ்யத்தின் அதிபதியான அபிசந்த்ரனுடைய புத்ரன் வஸுராஜனும், ஆசார்யபுத்ரனான பர்வதகனும் அவருக்குச் சிஷ்யர்களாயிருந்தோம். ஒருநாள் அவர் எங்கள் ஒவ்வொருவருக்கும் மாவால்செய்யப்பட்ட ஒரு பக்ஷியைக்கொடுத்து, ஒருவருமில்லாதவிடத்தில் அதைக்கொண்டுபோய்க்கொல்லும்படி கட்டளையிட்டார். அப்படியே நாங்கள் வெவ்வேறுதிக்குகளில் சென்றோம். மற்ற இருவரும் சிலகாலங்கழித்துத்திரும்பிவந்து, தாங்கள் பக்ஷிகளை இன்னவிடத்தில் கொன்றோமென்று தெரிவித்தார்கள். நான் மாத்ரம் ஒருவருமில்லாத ஸ்தலத்தை எவ்வளவு தேடியும் அகப்படவில்லையென்றும், ஜீவஹிம்ஸை செய்யாதிருப்பது உத்தமமான தர்மமென்றும் சொன்னேன். எங்களைப் பரீக்ஷிப்பதற்காக இம்மாதிரி செய்த ஆசார்யர் என்னிடம் மிகவும் ஸந்தோஷித்து, மற்றிருவரையும் நரகத்தையடையும்படி சபித்தார். குருபுத்ரனான பர்வதகன் அதற்குக்காரணந்தெரியாமல் என்னுடன் வாக்வாதஞ்செய்ய ஆரம்பித்தான். "வேதத்தில் அஜத்தைப் பலிகொடுக்கவேண்டியதென்று சொல்லியிருக்கிறதல்லவா? ஸம்ஸ்கிருதபாஷையில் அஜம் என்பதற்கு ஆடு என்று அர்த்தம்" என்றான். நான் "ஸம்ஸ்கிருதத்தில் அஜம் என்றால் பிறப்பில்லாதது என்று அர்த்தம். அதாவது மூன்று வர்ஷங்கள்வரையில் கட்டிவைக்கப்பட்டிருக்கும் நெல். மூன்று வர்ஷங்களுக்கு மேற்பட்டநெல் விதைத்தால் முளைக்காது. ஆகையால் ஜீவஹிம்ஸையை விலக்கும் வேதமானது இப்படிப்பட்ட நெல்லைக்கொண்டு யாகஞ்செய்யவேண்டுமென்றே அஜம் என்ற சப்தத்தை உபயோகித்திருக்கவேண்டும்"

என்றேன். ஆனால் பர்வதகன் நான் சொன்னதை ஒப்புக்கொள்ளாமல் மறுக்க, வஸுராயனை மத்யஸ்தனாக வைத்து அவனைக் கேட்டேன். அவனும் பர்வதகன் சொன்னதை ந்யாயமென்று தீர்மானித்தான். இதைக்கேட்ட தேவர்கள் கோபங்கொண்டு, அவனை நாகதசையடையும்படி சபித்துவிட்டார்கள்" என்றார். அந்த யாகசாலையிலுள்ளவர்கள் எல்லோரும் அதைக்கேட்டு அவ்வளவு ஸூக்ஷ்மமான தர்மத்தைத்தெளிவாய் உபதேசித்ததற்காக நாரதரைக்கொண்டாடினார்கள். மருத்தராயனும் தனது யாகம் அழிந்ததைப்பற்றிக் கோபிக்காமல், நாரதருடைய உபதேசத்தை அங்கீகரித்துத் தனது புத்ரியாகிய கனகப்ரபையை ராவணனுக்கு விவாஹஞ்செய்து கொடுத்தான்.

பிறகு ராவணன் மதுராபட்டணத்திற்குச்சென்று, சாமரேந்த்ரருடைய கிருபையால் ஒரு சூலாயுதத்தைப்பெற்ற மதுவென்னும் அரசனைக் கண்டான். அங்கே சிலகாலமிருந்து, அவனுடன் ஸ்நேஹஞ்செய்து அவனுக்குத் தனது குமாரத்தி மனோரமையை விவாஹஞ்செய்துகொடுத்தான். பிறகு நளகூபரன் என்னுமரசன் அவனுடைய தேசத்தை மிகக்கொடுமையாய் ஆண்டுவருகிறானென்று ராவணன் தனது தூதர்களால் கேள்விப்பட்டு, அவன்மேல் படையெடுத்துச்சென்றான். அங்கே, உபரம்பை என்ற அவ்வரசனுடைய பத்னி தனது புருஷனைச்சீர்திருத்துவதாக ஒப்புக்கொண்டதின்மேல், அவனை மன்னித்து ரதனபுரத்தரசனாகிய இந்த்ரனுடன் யுத்தஞ்செய்து அவனை ஜயித்தான். அதுவரையிலும் ஒருவனாலும் ஜயிக்கப்படாத அவ்வரசன் மஹா வருத்தமடைந்து, அது தான் முன்காலத்தில் ஆனந்தமாலி என்ற முனியின் பத்னி அஹல்யையை அவமானஞ்செய்த பாபத்தின் பலமென்று தனது ஆசார்யரான நிர்வாணஸங்கமரிடமிருந்து தெரிந்துகொண்டு, கொஞ்சம் ஆறுதலடைந்தான்.

இவ்விதம் அதிக கீர்த்தியுடன் திக்விஜயஞ்செய்து, லங்கையைநோக்கித் திரும்பிவருகையில், அனந்தவீர்யர் என்ற ஒரு மஹர்ஷி அவனைக்கண்டு, "தசமுகா! நீ, பரஸ்திரீகளைச்சேர்ந்ததால் மஹா பாபத்தை ஸம்பாதித்தாய். ஆகையால் வாஸுதேவரின் ஆக்ஞைப்ரகாரம் உனக்கு ஒரு பெரிய கஷ்டம் நேரிடும். அவருடைய பத்னியை நீ பலாத்காரம்செய்ய யத்னிப்பாய். அவர் உன்னை நாசஞ்செய்வார்" என்றார். அதைக்கேட்டு ராவணன் மிகவும் வருத்தமடைந்து, "இனிமேல் என்னை அபேக்ஷியாத ஸ்த்ரீகளின்மேல் நான் ஆசைவைக்கிறதில்லை" யென்று ப்ரதிக்ஞைசெய்துகொண்டு லங்காநகரம்வந்து சேர்ந்தான்.

வைதத்யம் என்ற மலையினருகிலுள்ள மஹேந்த்ராபுரத்
தில், மஹேந்த்ரனென்று ஓர் அரசனுண்டு. அவனுக்கு ஹ்ருதய
ஸுந்தரீ என்ற பார்யையும், அஞ்சனஸுந்தரீ என்ற பெண்ணு
முண்டு. அநேகதேசத்தரசர்கள் அஞ்சனஸுந்தரியை விவா
ஹம் செய்வதற்காகத் தங்கள் ஜாதகங்களையும் படங்களையுமனுப்
பினார்கள். அரசன் தன்னுடைய மந்த்ரிகளுடன் யோசித்து,
வித்யுத்ப்ரபன், பவனஞ்ஜயன் என்ற இருவர்களை ஒப்புக்கொண்
டான். அவர்களில் வித்யுத்ப்ரபன் விசேஷ ஐச்வரியமுள்ள
வன்; ஸகல வித்யைகளிலும் தேர்ந்தவன்; மஹா ஸௌந்தர்ய
முள்ளவன்; ஆனால் ஜாதகரீதியாய் அவனுக்கு அல்பாயுஸ். ஆதி
த்யபுரத்தரசனுடைய ப்ரஹ்லாதராயனுடைய புத்ரன் பவனஞ்
ஜயனன் வித்யுத்ப்ரபனைப்போல அவ்வளவு உத்தமகுணங்கள்
பொருந்தியிராவிட்டாலும், ஜாதகரீதியாய் வெகு தீர்க்காயுஸ்
உள்ளவனென்று ஜ்யோதிஷர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டவன்.
ஆகையால் அவர்களில் பவனஞ்ஜயனை மஹேந்த்ரன் தனது
மணப்பிள்ளையாகக்குறிப்பிட்டு முஹூர்த்தம் நிச்சயித்து, மானஸ
தீர்த்தமென்ற புண்யஸ்தலத்திற்கு ஸமீபத்திலுள்ள ஒரு நகரத்
தில் விவாஹத்தை நடத்துவதாகத்தன்னுடைய பந்துக்களுக்கும்
ஸ்நேஹிதர்களுக்கும் ஸமாசாரமனுப்பினான்.

அப்படியே எல்லோரும் அங்கேவந்து சேர்ந்து விவாஹத்
திற்கு முந்தின மங்களகார்யங்களெல்லாம் வெகு சிறப்பாய் நடந்
தன. ஆனால், மணப்பிள்ளையான பவனஞ்ஜயன், ஜாதகரீதி
யாய்த் தான் தீர்க்காயுஸுள்ளவன் என்றதாலமாத்ரம மண
ப்பிள்ளையாக ஒப்புக்கொள்ளப்பட்டானென்று அறிந்தவனாகை
யால், விவாஹத்திற்கு முதல் நாள் ராத்ரி அஞ்ஜனஸுந்தரியின்
அந்தப்புரத்திற்குள் ஒருவருக்குந்தெரியாமல் ஒளிந்திருந்து,
அங்கே நடக்கும் வார்த்தைகளால் அவளுடைய அபிப்ராயத்
தைத்தெரிந்துகொள்ள நினைத்தான்.

அங்கே அஞ்ஜனஸுந்தரியும், அவளுடைய இரண்டு தோழி
களும் வேறுவிஷயங்களைப்பற்றிக் கொஞ்சநேரம் பேசிக்கொண்
டிருந்து, கடைசியில் ஒரு தோழி மற்றொருத்தியைப்பார்த்து,
"நமக்குத்தெரிந்த அரசர்களுக்குள் மஹாஸுந்தரனும் தன
வானுமிருக்கும் வித்யுத்ப்ரபனைவிட்டுப் பவனஞ்ஜயனுக்கு நம்
முடைய ராஜகுமாரியை விவாஹஞ்செய்துகொடுப்பதாக நிச்ச
யித்த காரணமென்ன?" என்றாள்.

அதற்கு மற்றொருத்தி, "வித்யுத்ப்ரபன் அல்பாயுஸ் உள்ள
வன்; பவனஞ்ஜயனோ மற்றவர்களைவிட தீர்க்காயுஸ் உள்ளவன்"
என்றாள்.

முதலாவது தோழி, "என்ன கஷ்டம்! வாழ்நாள் முழுவதும் விஷத்தைக் குடித்துக்கொண்டிருப்பதைவிட, ஒருநாள் அமிருதபானம்செய்துவிட்டு இறப்பது நல்லதல்லவா?" என்றாள்.

அஞ்ஜனாஸுந்தரி இதைக்கேட்டுக்கொண்டிருந்தும தடுத்துச்சொல்லவில்லை. பவனஞ்ஜயனுக்கு, அஞ்ஜனாஸுந்தரி தன்னைப்ரேமையுடன் விவாஹம் செய்துகொள்ளவில்லையென்றும், ஏதோ ஜ்யோதிஷர்களுடைய வார்த்தையால் தீர்க்காயுஸ் உள்ளவனென்ற ஒரு குணத்திற்காகவே ஸம்மதித்திருபபதாயும் தோன்றிற்று. அங்கே வந்திருக்கும் அநேக அரசர்கள், ஸ்நேஹிதர்கள், பந்துக்கள் முதலியவர்களுக்கு மனவருத்தமுண்டாகாமலிருக்கும்படி விவாஹத்தைமாத்திரம் செய்துமுடித்துவிடுகிறதென்றும், பிறகு அஞ்ஜனாஸுந்தரியைத் திரும்பிப்பார்க்கிறதேயில்லையென்றும நிசசயித்தான். மறுநாள் விவாஹம் நடந்தது. பவனஞ்ஜயன் அஞ்ஜனாஸுந்தரியைத் தன்னுடைய பட்டணத்திற்கழைத்துக்கொண்டுபோய் அவளுக்கு அந்தப்புரங்கள், வேலைக்காரர்கள் முதலிய ஏற்பாடுகளைச சிறப்பாகச்செய்து அவளைத்திரும்பிப் பாராமலேயேயிருந்துவிட்டான்.

அப்பொழுது, ராவணன் வருணனால் தோற்கடிக்கப்பட்டு, ப்ரஹ்லாதராயன் என்பவனைத் தன்னுடைய ஸைன்யங்களுக்குத் தலைவனாயிருந்து யுத்தத்தை நடத்தும்படி சொல்லியனுப்பினான். பவனஞ்ஜயன் இதைக்கேட்டுத் தானே லங்கைக்குப்போவதாகப் புறப்படத் தன்னுடைய பிதாவும் பத்னியும் எவ்வளவு தடுத்தும் கேட்காமல், வெகுதூரம் ப்ரயாணம்செய்து, மானஸரோவரம் என்ற ஏரிக்கரையில் அன்று தங்கினான். ராத்ரி வெகு உஷ்ணமாயிருந்ததால் படுக்கையில் தூக்கம்பிடிக்காமல் புரண்டுகொண்டிருக்கையில், ஒரு பெண் ஹம்ஸம் தன் புருஷனைவிட்டுப்பிரிந்து வருத்தப்படுவதைக்கேட்டு, லோகத்தில் ஸ்த்ரீபுருஷர்களிருக்கவேண்டிய க்ரமத்தையும், தான் தனதுபத்னியை நடத்திவரும் விதத்தையும் யோசிக்கையில் பச்சாத்தாபம்பிறந்து, இனிமேலாவது தான் அவளுக்குச்செய்த கெடுதியை நீக்கவேண்டுமென்று தீர்மானித்தான். உடனே ஒருவருக்குந்தெரியாமல் குதிரையேறித் தன்னுடைய நகரம் வந்துசேர்ந்து, பாதிராத்ரியாவதற்குமுன் தன் பத்னியின் அந்தப்புரத்தில் ப்ரவேசித்து, அஞ்ஜனாஸுந்தரியைக்கண்டு, தான் அதுவரையில் அவளுக்குச்செய்த கெடுதியை மன்னிக்கவேண்டுமென்று ப்ரார்த்தித்தான். அவர்களிருவரும் அன்றிராத்ரி வெகு சந்தோஷமாயிருந்தார்கள். விடியற்காலையில பவனஞ்ஜயன் எழுந்திருந்து அதிக சீக்கிரத்தில் திரும்பிவரு

வதாகத் தன் பத்னியிடஞ்சொல்லித் தான் வந்ததற்கு அடையாளமாகவும், ஒருவேளை தன் பத்னி கர்ப்பவதியானால் அவள்மேல் யாதொரு அபவாதம்சொல்ல இடமில்லாமலிருக்கும்படிக்கும், தன்னுடைய முத்ரைமோதிரத்தை அவளிடம் கொடுத்து, ஒருவருக்குக்தெரியாமல் தன்னுடைய கூடாரம்வந்து சேர்ந்து, அவ்விடமிருந்து லங்கைக்குப்போனான்.

சிலகாலத்திற்குப்பின்பு அஞ்ஜனாஸுந்தரி கர்ப்பவதியானாள். அவளுடைய மாமியார் அதையறிந்து தன் புருஷனிடத்தில் முறையிட, அவர்கள் அஞ்ஜனாஸுந்தரி சொல்லும் காரணங்களைக்கேட்காமலும், அவள் காட்டின முத்ரைமோதிரத்தைப்பார்க்காமலும், அவளுடைய புருஷன் வருகிறவரையில் யாதொரு முடிவும் செயயவேண்டாமென்ற மந்த்ரியின் வார்த்தையை லக்ஷ்யம்செய்யாமலும், மறுநாளே அந்தக்குற்றமற்ற பெண்ணைத் தங்கள் தேசத்திலிருந்து துரத்திவிட்டார்கள். அவளும் தன் தாய்தகப்பனிடம்போய் முறையிட்டும், அவர்கள் "நீ வாஸ்தவமாய்க் குற்றஞ்செய்யாவிட்டால் உன்னை இம்மாதிரி தண்டிப்பார்களா?" வென்று ஒரு நிமிஷங்கூட இடங்கொடுக்காமல் துரத்திவிட்டார்கள்.

அப்பொழுது அஞ்ஜனாஸுந்தரி தனக்குப்ராணஸகியான வஸந்ததிலகையைச்சரணமடைய, அவளும் மனஸுருகி, அஞ்ஜனாஸுந்தரியுடன் தானுங்கூடவிருந்து அவள் ப்ரஸவிக்கிறவரையில் வேண்டிய ஒத்தாசைகளைச்செய்வதாகத் தைர்யம்சொன்னாள். பிறகு அவர்கள் மெள்ளமெள்ள ஓர் ஜனஸஞ்சாரமில்லாத அடர்ந்தகாட்டின் நடுவிலிருக்கும் ஹனுபுரம் என்ற பட்டணத்திற்குச் சென்று, அமிதகதி என்ற ரிஷியினுடைய ஆசரமத்திற்குஸமீபத்தில் குடிசையொன்றைக்கட்டிக்கொண்டு அவ்விடம் வஸித்தார்கள்.

ஒருநாள் காலையில் வஸந்ததிலகை அந்த ரிஷியின் ஆச்ரமத்திற்குச்சென்று நமஸ்கரித்து, "ஸ்வாமி! அஞ்ஜனாஸுந்தரியின் கதியென்ன? அவள் வயிற்றிலிருக்கும் சிசு க்ஷேமமாயிருக்குமா?" வென்று கேட்டாள். அதற்கு மஹர்ஷியும், "இவள் பூர்வஜன்மத்தில் கனகரதன் என்ற அரசனுடைய இரண்டு பத்னிகளில் லக்ஷ்மீவதியென்று ஒருத்தி; இவள் தன்னுடைய சக்களத்தியிடத்தில் பொறாமைகொண்டு, அவளுக்குக்கெடுதல்செய்ய நினைத்து, அவள் பூஜிக்கும் ஜினஸ்வாமியின் விக்ரஹத்தைத்திருடிக்குப்பைமேட்டிலெறிந்துவிட்டாள். பிறகு தன்னுடைய துஷ்டத்தனத்திற்காக மிகவும் வருத்தப்பட்டு, எறிந்துவிட்ட விக்ரஹத்தை எடுத்துக்கொண்டுவந்து, தன்னுடைய அபராதத்தை

மன்னிக்கவேண்டுமென்று ஸ்வாமியை ப்ரார்த்தித்தாள். ஸ்வாமியினுடைய விக்ரஹத்தைக் குப்பைமேட்டிலெறிந்ததால் இந்த ஜன்மத்தில் பந்துக்களால் துரத்தப்பட்டாள். ஆனால் மிகவும் வருத்தப்பட்டுத் தான் செய்த பாபத்தை மன்னிக்கும்படி ப்ரார்த்தித்ததால் இந்த ஜன்மத்தில் ஒரு மஹாத்மாவான புத்ரன் அவளுக்குப்பிறப்பான். சிலகாலங்கழித்து அவள் புருஷனுடன் சேர்ந்து, அபவாதம் நீங்கிப் பந்துக்களால் திரும்பி அழைக்கப்படுவாள்" என்று சொன்னார்.

பிறகு சித்ரைமாஸம் ஆதிவாரம் ச்ரவண நக்ஷத்ரத்தில், அஞ்ஜனாஸுந்தரிக்கு ஓர் புத்ரன் பிறந்தான். அவன் பிறந்த விடம் ஹனுபுரமானதால் அவனுக்கு ஹனுமந்தனென்று பெயரிட்டார்கள். அந்தக்குழந்தை அதிபால்யத்திலேயே ஆச்சரியகரமான செய்கைகளைச்செய்து மஹாபராக்ரமசாலியென்று பெயர்பெற்றான். ஒருநாள் ஸூர்யன் உதிப்பதைக்கண்டு, அதை விளையாட்டுக் கருவியென்று எண்ணி அதைத் தாவிப்பிடிக்க ஆகாசத்தில் கிளம்பினான். அது தான் உத்தேசித்தபடியில்லையென்று தெரிந்துகொண்டு, ஸ்ரீசைலமென்னும் மலையில் குதிக்க அது பொடிப்பொடியாய்விட்டது.

இப்படியிருக்கப் பவனஞ்ஜயன் வருணன்மேல் படையெடுத்துச்சென்று அவனை ஜயித்து, அவனால் சிறையில் வைக்கப்பட்ட கரன், தூஷணன் என்ற ராவணனுடைய ஸஹோதரர்களை விடுவித்து, ராவணனால் பஹுமானஞ் செய்யப்பட்டுத் தன் தேசத்திற்குத் திரும்பிவந்தான். அங்கே, தன்னுடைய பத்னி கர்ப்பவதியானதையும், தன்னுடைய மாதாபிதாக்களால தேசத்தை விட்டுத்துரத்தப்பட்டதையும் கேள்விப்பட்டு, நடந்த விருத்தாந்தங்களை எல்லோருக்குந்தெரிவித்து, அவளைத் திரும்பவும் அழைத்துவருவதற்காகப் புறப்பட்டான். வெகுகாலம் அலைந்து, ஹனுபுரத்தில அஞ்ஜனாஸுந்தரி தனது புத்ரனுடன் வஸித்துக்கொண்டிருப்பதைக்கண்டு, அவளை அதுவரையிலும் தாய்போல் காப்பாற்றின வஸந்ததிலகைக்கு விசேஷ மர்யாதைசெய்து, அஞ்ஜனாஸுந்தரியையும் ஹனுமந்தனையும் அழைத்துக்கொண்டு தன் நகரம் வந்துசேர்ந்தான்.

பிறகு ஹனுமந்தன் ராவணனுக்கு விசேஷ உதவிசெய்து அவனை ஸந்தோஷப்படுத்த, ராவணன் தனது புத்ரி ஸத்யவதியையும், ராவணனுடைய தங்கை சூர்ப்பனகை தனது புத்ரி அநந்தகுஸுமையையும் அவனுக்கு விவாஹஞ்செய்து கொடுத்தார்கள். அவன் தனது பார்யைகளுடன் வானரத்வீபத்

திற்குத்திரும்பிவருகையில், ஹனுமந்தன் தங்களுடைய ஸ்நேஹிதனை ராவணனுக்குச்செய்த உபகாரத்திற்காக ஸுக்ரீவனும் நளனும், பத்மராகை, ஹரிமாலினி என்ற தங்களுடைய புத்ரிகளை விவாஹஞ்செய்து கொடுத்தார்கள்.

அயோத்யா நகரத்தில் விஜயன் என்று ஓர் அரசன் இருந்தான். அவனுக்கு ஹிமசூடையென்ற பார்யையும், வஜ்ரபாஹு, புரந்தரன் என்ற குமாரர்களும் இருந்தார்கள். மூத்தவன் மனோரமையென்றவளை விவாஹம் செய்துகொண்டான். ஆனால் சிறிதுகாலத்திற்குள் அவர்களிருவரும் ஸன்யாஸிகளானார்கள். பிறகு இளையவன் பட்டத்திற்கு வந்தான். அவனுக்குப்பின், கீர்த்திரதன், கோஸலன், ஹிரண்யகர்ப்பன், நஹுஷன், ஸௌதஸன், ஸிம்ஹரதன், ப்ரஹ்மரதன், சதுர்முகன், ஹேமரதன், சதரதன், வதயப்ரிதன், வாரிதரன், இந்துதரன், ஆதித்யரதன், மாந்தாதா, வீரஸேனன், பிரதிமன்யன், பிரதிபந்து, ரவிமன்யு, வஸந்தலேதகன், குபேரதத்தன், குந்து, சரபன், த்விரதன், ஸிம்ஹதசவன், ஹிரண்யகசிபு, புஞ்ஜஸ்தலன், ககுத்ஸ்தன், ரகுராயன், அனரண்யன் என்றவர்கள் முறையே தங்கள் பிதாவிற்குப் பிறகு ராஜ்யத்தை ஆண்டுவந்தார்கள். அனரண்யனுடைய புத்ரன் தசரதன் அயோத்யையில் வெகு கீர்த்தியுடன் ஆண்டுவந்தான். அந்தகாலத்தில், மிதிலா ராஜ்யத்தில் ஜனகமஹாராஜன் அரசு செய்துவந்தான். இவ்விருவரும் ப்ரியமித்ரர்கள்.

ஒருநாள் லங்காதிபதியான ராவணன் நாரதரைக் கண்டு "ஸ்வாமி! எனக்கு எப்பொழுது யாரால் மரணம் நேரிடும்?" என்று வேடிக்கையாய்க்கேட்க, அதற்கு நாரதர் "அயோத்யாதிபதியான தசரதனுடைய புத்ரனும், மிதிலாதிபதியான ஜனகமஹாராஜனுடைய புத்ரியும் உனது மரணத்திற்குக்காரணம்" என்றார். இதைக்கேட்டு ராவணன் பயந்து, அவர்களுக்குக் குழந்தைகள் பிறக்காமலிருக்கும்படி செய்துவிட்டால் தனக்கு மரணம் நேரிடாதென்று, தனது ஸஹோதரன் விபீஷணனை அவ்விருவர்களையும் கொன்றுவிடும்படியனுப்பினான். நாரதர் உடனே அவ்விருவருக்கும் இதைத்தெரிவிக்க, அவர்கள் தங்களைப்போல் ப்ரதிமைகளைச்செய்து ஸிம்ஹாஸனத்தில் வைத்துவிட்டுத் தூரதேசத்திற்கு யாத்ரைபோனார்கள். விபீஷணனும் படையெடுத்துச் சென்று, ப்ரதிமைகளை வெட்டிவிட்டு, அவ்வரசர்களைக்கொன்றதாக ராவணனிடத்தில் ஸந்தோஷஸமாசாரத்தைத்தெரிவித்தான்.

இப்படியிருக்கையில் தசரதர் வெகுதூரம் யாத்ரைசெய்து, முடிவில் மகததேசத்தில் தனது பத்னிகளான அபராஜிதை,

ஸுமித்ரை, கைகேயி, ஸுப்ரபை என்றவர்களோடு வஸித்துக் கொண்டிருந்தார். அங்கே தன்மேல் படையெடுத்துவந்த ஓர் அரசனுடன் யுத்தஞ்செய்கையில் கைகேயி அவருக்கு ஒத்தாசைசெய்து அவரைக் காப்பாற்றினுள். அரசன் மிகவும் ஸந்தோஷப்பட்டு அவளுக்கு இரண்டு வரன்களைக் கொடுத்தார். அவளும் அதைப் பெற்றுக்கொண்டு தனக்கு ஸமயம் வரும்போது கேட்பதாகச்சொன்னுள்.

தசரதருக்கு நான்கு புத்ரர்கள். அவருடைய மூத்த பார்யை அபராஜிதை, ஒருநாள் ஸ்வப்னத்தில் ஒரு ஸிம்ஹம், யானை, ஸூர்யன், சந்த்ரன் என்றவைகளைக் கண்டாள். அவளுக்கு மிகவும் கீர்த்திமானுன ஓர் புத்ரன் பிறப்பானென்பதற்கு அது அடையாளமென்று ஜ்யோதிஷர்கள் சொன்னுர்கள். அப்படியே ப்ரஹ்மலோகத்தில் வஸிக்கும் லக்ஷ்மீதேவியைப்போல் அழகுள்ள ஒரு குமாரன் பிறந்தான். அவன் ஒரு தேவதையினுடைய அம்சம். அவனுக்கு லக்ஷ்மியின் ஆஸனமான தாமரைப்புஷ்பத்தின் பெயராகப் 'பத்மன்' அல்லது 'ராமன்' என்று பெயர் வைத்தார்கள்.

தசரதனுடைய இரண்டாவது பார்யை ஸுமித்ரை, ஒரு ஸிம்ஹம், யானை, ஸூர்யன், சந்த்ரன், அக்னி, ஸமுத்ரதேவதை, லக்ஷ்மீ என்றவர்களை ஸ்வப்னத்தில் கண்டாள். அவளுக்கு மஹாவிஷ்ணுவின் அம்சமாக நீலவர்ணமுள்ள ஒரு புத்ரன் பிறந்தான். அவனுக்கு 'நாராயணன்' அல்லது 'லக்ஷ்மணன்' என்று பெயரிட்டார்கள்.

தசரதனுடைய மூன்ருவது பார்யை கைகேயிக்குப்பரதனென்ற புத்ரனும், நான்காவது பார்யை ஸுப்ரபைக்குச் சத்ருக்னனென்ற புத்ரனும் பிறந்தார்கள்.

அதே காலத்தில் ஜனகமஹாராஜன் வைதேஹியை விவாஹம் செய்து ஸீதையென்ற புத்ரியைப்பெற்ருன்.

கைலாஸ மலேக்கு வடக்கேயுள்ள பர்பரதேசத்தில், மயூரமாலா என்ற நகரத்தரசனுகிய ம்லேசசவம்சத்திற்பிறந்த அதரங்கமன், ஜனகர்மேல் படையெடுத்துவர, அவர் தசரதரைத் தனக்கு ஒத்தாசைசெய்யும்படி கேடடுக்கொண்டார். அப்பொழுது, தசரத புத்ரனுன ராமன் தன் தகப்பனுக்குப்பதிலாகசசென்று, அதரங்கமனை ஜயித்தான். ஜனகர் மிகவும் ஸந்தோஷித்துத் தனது புத்ரி ஸீதையை அவனுக்கு விவாஹம்செயதுகொடுக்க நிச்சயித்தார். இப்படியிருக்க, நாரதர் ஸீதையின் அழகைப்பற்றிக்கேள்விப்பட்டு அவளைப்பார்க்கபபோனபோது, அவள் நாரதருடைய

பயங்கரமான ரூபத்தைக்கண்டு ஓடி ஒளிந்துகொண்டாள். கோபங்கொண்டு, பாமண்டலன் என்ற அரசனை ஸீதையைப் பலாத்காரமாய்க் கொண்டுபோகும்படி தூண்டிவிட்டார். ஆனால் அவ்வரசனுடைய தகப்பன் சந்த்ரகதியென்பவன் அதைத்தடுத்து, ஸீதையைத் தனது புத்ரனுக்கு விவாஹஞ்செய்து கொடுக்கும்படி ஜனகருக்குச்சொல்லியனுப்பினன். ஜனகர் தான் அவளை முன்னமே ராமனுக்கு விவாஹஞ்செய்துகொடுப்பதாய் வாக்தத்தம் பண்ணிவிட்டதாகத் தெரிவித்தார். அதைக்கேட்டுச் சந்த்ரகதியென்பவன் "ஸ்த்ரீரத்னமான ஸீதையை அலபவீர்யமுள்ள ராமனுக்குக் கொடுப்பது கொஞ்சங்கூடத்தகாது. நான் வஜ்ராவர்த்தம என்ற ஓர் உத்தமமான வில்லை அனுப்புகிறேன்; அதை ராமன் நாணேற்றி வளைத்தால் ஸீதையை அவனுக்குக் கொடுக்கலாம்" என்று சொல்லியனுப்ப, ஜனகரும் அதற்கு ஸம்மதித்து, அந்த வில்லை நாணேற்றி வளைக்கும்படி ராமனைக் கேட்டுக்கொண்டார். அவரும் விளையாட்டாக அப்படிச்செய்ய, ஜனகமஹாராஜன் ஸீதையை அவருக்குப் பாரியையாகக்கொடுத்தார். லக்ஷ்மணன் வித்யாதரவம்சத்திற்பிறந்த பதினெட்டு ஸ்த்ரீகளையும், பரதன ஜனகரின் ஸஹோதரருடைய புத்ரியையும் விவாஹம செய்துகொண்டார்கள்.

பிறகு தசரதர், தனது பார்யைகள், புத்ரர்கள், நாட்டுப் பெண்கள், பரிவாரங்களுடன் ஜினஸ்வாமியினுடைய அனுக்ரஹத்தால் அயோத்யைக்குத் திரும்பிவந்து, அரசாண்டுவந்தார். ஆனால மிகவும் வயஸானதால் தனது மூத்தகுமாரனான ராமனுக்குப் பட்டாபிஷேகம் செய்ய நிச்சயித்தார். அப்பொழுது கைகேயீ, தசரதர் தனக்கு முன்னமே கொடுத்திருந்த இரண்டு வரங்களைத்தரவேண்டுமென்று ப்ரார்த்தித்தாள். தசரதரும் அதற்கு ஸம்மதிக்க, "ராமனைக் காட்டுக்கனுப்பவேண்டும், என்னுடைய புத்ரனாகிய பரதனுக்குப் பட்டாபிஷேகம் செய்விக்கவேண்டும்" என்றாள். ஸத்யந்தவறாத தசரதர், கைகேயியினுடைய க்ரூரமான வார்த்தைகளால் மிகவும் நொந்து, தனது ப்ரதிக்ஞையைப் பொய்யாக்கக்கூடாதென்று அவள் கேட்டபடியே ராமனைக் காட்டிற்கனுப்பி பரதனுக்குப் பட்டாபிஷேகம் செய்துவைப்பதாக ஒப்புக்கொண்டார்.

ராமனும் தனது தகப்பனுடைய ப்ரதிக்ஞையை நிறைவேற்றுவது தர்மமென்றெண்ணி, பரதன் எவ்வளவு ப்ரார்த்தித்தும் அதற்கு ஸம்மதிக்காமல், ஸீதையோடும், லக்ஷ்மணனோடும் காட்டிற்குச்சென்று வெகுதூரம் ப்ரயாணம்செய்து, பாரியாத்ரம்

என்ற ஒரு பெரியவனத்திற்புகுந்து, சித்ரகூடம் பர்வதத்தின் ஸமீபத்தில்வந்து சேர்ந்தார்கள்.

அங்கிருந்து அவர்கள் வெகுதூரம் ப்ரயாணம்செய்து, ஒரு நாள், மனுஷ்யஸஞ்சாரமில்லாத ஒரு பட்டணத்தைக்கண்டு, அதற்கு ஸமீபத்தில் நின்றுகொண்டிருந்த ஒரு வேடனைக்கூப்பிட்டு, "இந்த நகரம் இப்படியிருக்க காரணமென்ன?" என்று ராமன் கேட்டார். அவனும், "ஸ்வாமி! இது தசாங்கமென்னும் நகரம். இங்கே வஜ்ரகர்ணி என்ற ஒரு சிற்றரசன் மிகவும் கீர்த்தியாய் ராஜ்யபரிபாலனம் செய்துவந்தான். அவன் ஜிநஸ்வாமியிடத்தில மிகுந்த பக்தியுள்ளவனாய், அவருடைய ரூபத்தைத்தனது முத்ரைமோதிரத்தில் எழுதிவைத்துக்கொண்டு, எப்பொழுதும் அவரையே பூஜித்து, அவரைத்தவிர வேறு தைவத்தையாவது மனுஷ்யனையாவது வணங்குகிறதில்லையென்று பாதிஞை செய்திருந்தான். அவனுடைய அதிபதியான ஸிம்ஹோதரஸசக்ரவர்த்தி அதைக்கேட்டு, அவனையும் அவனுடைய ப்ரஜைகளையும் இந்த நகரத்திலிருந்து துரத்திவிட்டு, இதை முழுதிலும் நாசஞ்செய்துவிட்டான்" என்றான். ராமன் அதைக்கேட்டு மிகவும வருத்தமடைந்து, லக்ஷ்மணனைக்கொண்டு ஸிம்ஹோதரனை தண்டிக்கசெய்து அவனுக்கும் வஜ்ரகர்ணிக்கும் ஸமாதானம் செய்வித்தார். வஜ்ரகர்ணியும் முன்போல் ஜிநஸ்வாமியை யாதொரு இடையூறுமில்லாமல் ஸந்தோஷமாய்ப்பூஜித்து வந்தான்.

பிறகு அவர்கள் அரண்யத்தில ப்ரயாணம் செய்கையில், வாலகில்யன் என்ற அரசனுடைய புத்ரி கல்யாணமாலிகை, கிராதவம்சததரசனகிய காகன் என்பவனால் தனது பிதா சிறையிலவைக்கப்பட்ட துக்கத்தை ஸஹிக்காமல, புருஷவேஷந்தரித்துக் காட்டில் திரிவதைக்கண்டார்கள். ராமன், லக்ஷ்மணனைககொண்டு காகனை வதம்செய்து வாலகில்யனை விடுவித்தார்.

ஒருநாள் ப்ரயாணம்செய்து கடும்வெயிலால் களைத்துத் தூரத்தில்தெரிந்த ஒரு உயர்ந்த ஆலமரத்தின்கீழ்போய் சற்று இளைப்பாற உட்கார்ந்தார்கள். அப்பொழுது அம்மரத்தில் வஸித்துக்கொண்டிருந்த ஓர் யக்ஷன் ராமனைப்பூஜிப்பதற்காகக் கீழே இறங்கிவந்து, தன்னுடைய மாயாபலத்தால் ஒரு அழகான பட்டணத்தை நிர்மாணஞ்செய்து, அதில் அவர்களைசசிலகாலம் வஸிக்குமபடி செய்தான்.

ஒருநாள் ராமன், விஜயபுரம் என்னும் நகரத்தைச்சேர்ந்து, அதற்கு வெளியிலிருந்த ஒரு தோட்டத்தில் உலாவிக்கொண்டிருக்கையில், ஒரு ஸ்த்ரீ தற்கொலைசெய்துகொள்ள யத்னிப்ப

தைக்கண்டார். உடனே அவளைத்தடுத்துப் "பெண்ணே! நீ இவ்விதம் உயிரையிழக்கத் துணிந்ததென்ன?" என்று கேட்க; அவளும், "ஸ்வாமீ! தாங்கள் என்னைக்காப்பாற்றினது எனக்கு ஒரு பெரிய உபகாரமென்றெண்ணுகிறீர்கள். ஆனால் உங்களுக்கு வர்ஸ்தவந்தெரிந்திருந்தால், நான் பிழைத்திருந்து இவ்வித துக்கத்தையனுபவிப்பதைவிட இறப்பதே நலமென்று தாங்களே என்னைக்கொன்றிருப்பீர்கள்" என்று கதறி அழுதாள். அ காரணமாய் அவளுக்கு வருத்தத்தை உண்டுபண்ணினதைப் பற்றி ராமன் தன்னை நிந்தித்துக்கொண்டு, எப்படியாவது அவளுடைய துக்கத்தைப் பரிஹாரம்செய்கிறதென்று நிச்சயித்து, "பெண்ணே! கவலைப்படாதே. உன் மனஸிலிருக்கும் எண்ணத்தைச்சொல்வாயானால் எப்படியாவது அதை முடித்து வைப்பதாக ப்ரதிக்ஞை செய்கிறேன்" என்றார். அவளும், "ஸ்வாமி! தங்கள் பக்கத்தில் நிற்கும் லக்ஷ்மணரிடத்தில் நான் ஆசைகொண்டு, அவரையே விவாஹம் செய்துகொள்ளுகிறதென்று ப்ரதிக்ஞை செய்திருக்கிறேன். ஆனால் அவருக்கோ என்னிடத்தில் ப்ரியமில்லை. இனிமேல் உயிரை வைத்திருப்பதில் ப்ரயோஜனமென்ன? தாங்கள் செய்த பிரதிக்ஞை வீணல்லவா?" என்றாள். அதைக்கேட்டு ராமன், லக்ஷ்மணனை நோக்கிக் "குழந்தாய்! இவள் விசேஷ ரூபவதி; உத்தமஸ்வபாவமுள்ளவள்; உன்னிடத்திலேயே மனதை வைத்தவள்; நான் செய்த ப்ரதிக்ஞையும் வீணாகக்கூடாது; ஆகையால் இவளைப் பார்யையாக ஒப்புக்கொள்" என்றார். லக்ஷ்மணனும், தமயன் சொல்லைத் தவறாதவராகையால் அப்படியே செய்தார். தாங்கள் திரும்பிவருகிறவரையில் அவளுடைய பெற்றோர் வீட்டில் அவளையிருக்கும்படி சொல்லிவிட்டு, மறுபடியும் ப்ரயாணம் செய்தார்கள்.

வழியில் நந்தவர்த்தமென்னும் தேசத்தரசனான அதிவீர்யனென்பவன் தனது யஜமானனான பரதமஹாராஜனுக்கு விரோதமாய்க் கலகம் செய்துகொண்டிருக்கிறானென்று கேள்விப்பட்டு, அவனைத்தகுந்தபடி சிக்ஷித்தார்.

பிறகு அவர்கள், க்ஷேமாஞ்ஜலி என்னும் பட்டணத்தைச் சேர்ந்தார்கள். அங்கே லக்ஷ்மணன் ஜிதபத்மா என்னும் ராஜகுமாரியை விவாஹம்செய்து, மலைப்ரதேசத்தில் வஸிக்கும் இரண்டு ப்ராஹ்மணர்களுக்கு மோக்ஷங்கொடுத்தார்.

பிறகு தண்டகாரண்யத்தில் ப்ரவேசித்தார்கள். முன்னொரு காலத்தில் தண்டன் என்னுமரசன் தான்செய்த பாபகர்மத்தால் அந்த அரண்யத்தில் பக்ஷியாகப்பிறந்தான். ஆகையால் அதற்குத்

தண்டகாரண்யம் என்ற பெயர் கிடைத்தது. ராமன் அந்தப்
பக்ஷியைக்கண்டு அதை ஜடாயுஸ் என்ற புண்யஜந்துவாகச்
செய்தார்.

கரனுக்கும் சூர்ப்பநகைக்கும் குமாரனை சம்பூகனென்ப
வன், சந்த்ரஹாஸமென்ற விசேஷ சக்தியுள்ள கத்தியையடைவ
தற்காக க்ரௌஞ்சபமென்னும் நதிக்கரையில் ஒரு மூங்கிற்புத
ரில் தபஸ் செய்துகொண்டிருந்தான். அதை லக்ஷ்மணஸ்வாமி
கண்டு, அவனுடைய தபஸ் ஸித்தித்தால் லோகத்திற்கு விசேஷ
உபத்ரவம் உண்டாகுமென்று எண்ணி, அவன் அடைய விரும்
பின அந்தக்கத்தியைக்கொண்டே அவனை நாசம் செய்தார். அ
தைக்கேட்டுச் சூர்ப்பநகை மிகவும் வருத்தமடைந்து ராமனிடத்
தில் முறையிட்டாள்.

அந்தக்காயமாய அநேகந்தடவை அங்கேவரும்போது ராம
னுடைய அழகைக்கண்டு மோஹித்துத் தன்னை விவாஹம்செய்து
கொள்ளவேண்டுமென்று அவரை ப்ரார்த்தித்தாள். ராமனும் அ
வளை அலக்ஷ்யம்செய்து துரத்திவிட, அவள் தனது புருஷனிடம்
சென்று, ராமன் தன்னை அவமானப்படுத்தினதாக முறையிட்டு, அ
வரையும் லக்ஷ்மணனையும் யுத்தம்செய்து கொல்லும்படி அவனைத்
தூண்டிவிட்டாள். கரனும் அப்படியே ஒரு பெரிய ஸைன்யத்து
டன் படையெடுத்துச்சென்று அவர்களை எதிர்த்தான்; ராமனை ஸீ
தையுடன் ஆச்ரமத்திலிருக்கும்படி லக்ஷ்மணனை நிறுத்திவிட்டுக்க
ரனோடு யுத்தம்செய்தார். அப்பொழுது ராவணன், தனது ஸஹோ
தரியான சூர்பநகையை ஸந்தோஷப்படுத்துவதற்காக ராமனிருக்
கும் ஆச்ரமத்திற்குச் சென்று, மறைவிலிருந்து, தன்னைக் காப்
பாற்றவேண்டுமென்று லக்ஷ்மணனுடைய குரலோடு ராமனைக் கூ
வியழைத்தான். ஸீதையும் அதைக்கேட்டு லக்ஷ்மணனுக்கு மிகுந்
த ஆபத்வந்துவிட்டதெனறு நினைத்து, ராமனை அவ்விடத்திலிருந்
து சீக்ரமாய் அனுப்ப, அவள் தனியாயிருந்த ஸமயம்பார்த்து, ராவ
ணன் அவளைப் பலாத்காரமாய்த் தூக்கிக்கொண்டுபோய் லங்கை
யில் அசோகவிருக்ஷத்தினடியில் சிறையாகவைத்தான். பிறகு
தன்னால் கூடியவரையிலும் ப்ரார்த்தித்தும், பயமுறுத்தியும், தன்
னுடைய தூண்டுதலால் தனது பார்யை மண்டோதரி என்பவள் தன்
னால் கூடியவரையில ப்ரயத்னம்செய்தும், ஸீதை ராவணனுடைய
இஷ்டப்படி நடக்க ஸம்மதிக்காமல், அவனை நிந்தித்து மிகவெறுப்
புடன் கடுமையாய்ப்பேசித் துரத்திவிட்டாள். அவளை விட்டுவிடு
ம்படி விபீஷணன் ராவணனுக்குப் புத்திசொல்லியும் அவன் கேட்
காமல் முன்போலவே நிர்ப்பந்தப்படுத்திக்கொண்டிருந்தான்.

இப்படியிருக்கையில், ராம லக்ஷ்மணர்கள் கரனை யுத்தத்தில் ஜயித்து, அவனுடைய ஸைன்யங்களைக் கொன்று தங்களுடைய ஆச்ரமத்திற்குத் திரும்பிவருகையில், லக்ஷ்மணனுக்கு ஆபத்நேர்ந்ததென்று ஸீதைக்குத்தோற்றின விபரீதபுத்தியைப்பற்றிப் பரிஹாஸம் செய்துகொண்டுவந்தார்கள். ஆச்ரமத்திற்குவந்து பார்க்கையில், ஸீதையைக் காணுமல், எவ்வளவு தேடியும், அங்கிருப்பவர்களிடத்தில் விசாரித்தும் யாதொரு ஸமாசாரமும் தெரியவில்லை.

விராதனென்னும் அரசன், கரதூஷணர்கள் தன்னை மிகவும் ஹிம்ஸிப்பதாக ராம லக்ஷ்மணர்களிடத்தில் முறையிட, லக்ஷ்மணன் அவர்களை யுத்தத்தில் கொன்று, விராதனைப் பாதாளலங்கைக்கு அரசனைச்செய்தார். அவனும் தனக்கு ராமனிடத்திலிருந்த விச்வாஸத்திற்கு அடையாளமாக நான்குதிக்குகளிலும் தூதர்களையனுப்பி ஸீதையைத் தேடச்சொல்லியும் ப்ரயோஜனமில்லாமற்போயிற்று.

இப்படியிருக்கையில் வானரதேசத்தில் அரசுசெய்துவந்த ஸுக்ரீவனுடைய பார்யை தாரை என்பவளிடத்தில் ஸஹஜாதி என்பவன் ஆசைகொண்டு, ஸுக்ரீவனில்லாத ஸமயத்தில் மாயையால் அவனைப்போல ரூபம தரித்து, அவனுடைய அரண்மனையில் ப்ரவேசித்தான். அதேகாலத்தில் நிஜஸுக்ரீவனும் அங்கே வர, அவ்விருவர்க்கும் யுத்தம் நடந்தது; அதில மாயாஸுக்ரீவன் நிஜஸுக்ரீவனை ஜயித்துத்துரத்திவிட, அவனும் ராமனிடத்திற் சென்று அவரைச் சரணமடைந்தான். ராமன் உண்மையைத் தெரிந்துகொண்டு, மாயாஸுக்ரீவனை நாசம் செய்து நிஜஸுக்ரீவனை வானரத்வீபத்திற்கரசனாக ஏற்படுத்தினர். அவனும் ஸீதையைக் கண்டுபிடிக்கும்விஷயத்தில் தன்னால் கூடிய ஒத்தாசை செய்வதாக ப்ரதிக்ஞைசெய்தான்.

பிறகு ஸீதை ராவணனால் லங்கையில் சிறையில் வைக்கப்பட்டு ஹிம்ஸிக்கப்படுகிறளென்று ராமனுடைய மித்ரர்களான விராதன், பர்மண்டலன் என்னும் அரசர்களால் தெரிந்துகொண்டு, ஸுக்ரீவன் தன்னுடைய வானரஸைன்யங்களை லங்காத்வீபத்திற்கனுப்பித் தேடச்செய்தான். ஹனுமந்தனையும் ராமனுடைய முத்ரைமோதிரத்துடன் லங்கைக்கனுப்பி, ஸீதையினுடைய ஆபத்காலத்தில் அவளுக்கு ராமனுடைய க்ஷேமஸமாசாரத்தைத் தெரிவித்து, அதற்கு அடையாளமாக அந்த மோதிரத்தைக் கொடுக்கும்படி சொன்னன்.

ஹனுமந்தன் வெகுச்ரமத்துடன் ஸமுத்ரத்தைத் தாண்டி, லங்காத்வீபம் சேர்ந்து, விபீஷணனைக்கண்டு, அவனுடைய உதவியால் ஸீதையிருக்கும் தேவரமணஉத்யானமென்ற தோட்டத்திற்குச்சென்றார். அங்கே அசோகவிருக்ஷத்தினடியில் மஹாதுக்காக்ராந்தையாய் ராமனை த்யானித்துக்கொண்டு உட்கார்ந்திருக்கும் ஸீதையைக்கண்டு, மஹாபக்தியுடன் அவளை நமஸ்கரித்து, ராமனுடைய க்ஷேமஸமாசாரத்தைத் தெரிவித்து, அதற்கடையாளமாக ராமனுடைய முத்ரைமோதிரத்தைக்கொடுத்தார். ஸீதை ராமனுடைய ஸமாசாரத்தையும், முத்ரைமோதிரத்தையும் வெகு ஸந்தோஷத்துடன் பெற்றுக்கொண்டு, ஆனந்தத்தால் கண்ணீர்பெருக, முத்ரைமோதிரத்தை முத்தமிட்டுத், தன்னுடைய சூடாமணியை ராமனுக்கு அடையாளமாகக்கொடுத்தனுப்பி, அதிசீக்ரத்தில் லங்கைக்குவந்து தன்னைச் சிறையிலிருந்து மீட்டுக்கொண்டு போகவேண்டுமென்று தன்னுடைய ப்ரார்த்தனையையும் தெரிவித்தாள்.

ஹனுமந்தன் தான் லங்கையில் வந்திருப்பதை ராவணனுக்கு எப்படியாவது தெரிவித்துவிட்டுப் போகவேண்டுமென்று நினைத்து, ராவணனுடைய ஸைன்யங்களில் அநேகர்களைக்கொன்று, ஸேனாதிபதியான அக்ஷகுமாரனையும் நாசம்செய்தார். பிறகு நாகபாசங்களால் அவரைக்கட்டி ராவணனுக்கு முன்பாகக் கொண்டுபோனார்கள். அங்கே அவைகளைத்தெறித்தெறிந்து, ராவணனை அவனுடைய துன்மார்க்கத்தைப்பற்றி மிகவும் நிந்தித்து, அவனுடைய கிரீடத்தைப் பொடிப்பொடியாக உடைத்தார்.

பிறகு லங்கையை நாசஞ்செய்து, ராமனிருக்குமிடம் திரும்பிவந்து, ஸீதையினுடைய க்ஷேமத்தையும், அவள் சொல்லியனுப்பின ஸமாசாரத்தையும் தெரிவித்து, அவளுடைய சூடாமணியையும் அவரிடத்தில் வெகுபக்தியுடன் ஒப்புவித்தார். ராமலக்ஷ்மணர்கள், ஸுக்ரீவன், ஹனுமந்தன், வானர ஸைன்யங்கள், பாமண்டலன் முதலிய மித்ரர்கள் எல்லோரும் லங்கையை நோக்கி விமானங்களில் புறப்பட்டுப்போகையில், ஸமுத்ரன், ஸேதுவென்ற இரண்டரசர்கள் தடுக்க, அவர்களை நளன், நீலன் என்னும் வானரசேனாதிபதிகளால் தோற்கடித்து, ஸுவேலன், ஹம்ஸரதன் முதலிய சத்ரு ராஜாக்களுடன் யுத்தஞ்செய்து அவர்களையும் ஜயித்து, லங்காபட்டணத்தின் ஸமீபம்வந்து சேர்ந்தார்கள்.

இப்படியிருக்கையில், விபீஷணன், ராவணனுக்கு எவ்வளவு புத்திசொல்லியும், அவன் ஸீதையைவிட ஸம்மதிக்காததால், தன்

னுடைய ஸைன்யங்களுடன் ராமனிடத்தில்வந்து, ஸமீபத்தில் நடக்கப்போகிற யுத்தத்தில் ராமனுக்கு விசேஷ ஒத்தாசை செய்வதாய் உறுதிசெய்தான். பிறகு, இரண்டு ஸைன்யங்களும் ஒன்றுக்கொன்று கலந்து கோரயுத்தம்செய்ய ஆரம்பித்தன. அதில் ராவணன் வானர ஸைன்யங்களை நாகாஸ்த்ரங்களால் கட்டி, ராமனை யுத்தம்செய்யாதபடி தடுத்துவிட்டான். அப்பொழுது லக்ஷ்மணன் தன்னுடைய வாஹனமான கருடனை ஸ்மரிக்க, அவரும் வந்து நாகாஸ்த்ரங்களை நாசம்செய்தார். பிறகு ராமன வெகு கடுமையாய் யுத்தம்செய்து, ஜயிக்கும் ஸமயததில், ராவணன் நேரே யுத்தம்செய்யவந்து, லக்ஷ்மணனுக்காகத் தான் வைத்துக்கொண்டிருந்த சகதி என்னும் ஆயுதத்தை அவர்மேல் ப்ரயோகித்தான். லக்ஷ்மணனும் அதைத் தடுக்கக்கூடாதென்ற விதியையனுஸரித்து, அந்த ஆயுதத்திற்குக் கட்டுப்பட்டு, உயிரிழந்தவாபோல் கிடந்தார். அவருடைய மித்ரனான பாமண்டலன், அந்த ரஹஸ்யத்தைத் தெரிந்தவனாகையால், சீக்ரமாய் த்ரோணபர்வதம சென்று, அங்கிருந்து அமிருதத்தைக்கொண்டுவந்து ராமனிடங்கொடுக்க, அவரும் அதை லக்ஷ்மணன்மேல் தெளித்து அவரை எழுப்பினார். பிறகு லக்ஷ்மணன், ராவணனை வதம்செய்து யுததத்தை முடிப்பதற்கு ஸமயம வந்துவிட்டதென்றுகண்டு, தன்னுடைய சக்ராயுதத்தை ஸ்மரிக்க, அது உடனே ப்ரஸன்னமாய் ராவணனுடைய சிரஸை அறுத்துவிட்டது.

ராவணனுடைய ஸஹோதரனான விபீஷணன், லக்ஷ்மணனை லங்காராஜ்யத்தை ஒப்புக்கொள்ளும்படி வெவ்வளவு ப்ரார்த்தித்தும் அவர் ஸம்மதிக்காமல், விபீஷணனுக்கே லங்காராஜ்ய பட்டாபிஷேகம் செய்துவைத்தார். ராவணனுடைய மற்றொரு ஸஹோதரனான கும்பகர்ணனையும், ராவணனுடைய புத்ரனான இந்ரஜித்தையும் வேறு ராஜ்யங்களுக்கு அதிபதிகளாக நியமித்தார். லங்கையில் பதினாறு தினங்கள் வரையில் விபீஷணனால் உபசரிக்கப்பட்டுப், பிறகு புஷ்பகமென்னும் விமானத்திலேறி, ஸீதை, லக்ஷ்மணன், ஸுக்ரீவன், ஹனுமந்தன், பாமண்டலன், இன்னும் மற்ற ஸ்நேகிதர்களுடன் அயோத்யைநோக்கி ப்ரயாணம்செய்தார். அயோத்யைக்கு ஸமீபத்தில், பரதனும் சத்ருக்னனும் வெகு ஆனந்தத்துடன் அவர்களை எதிர்கொண்டு வர, எல்லோரும் அயோத்யைக்குச் சென்று அங்கே ப்ரஜைகளால் மஹோத்ஸவத்துடன் கொண்டாடப்பட்டார்கள். அப்போது பரதன், தனது ராஜ்யத்தை ராமனிடத்தில் ஒப்புவித்து ஸன்யாஸியானான்.

ராமனைக் காட்டிற்கனுப்பின கைகேயியும் தன்னுடைய கெட்ட நடத்தையைக்குறித்து வெட்கப்பட்டு, ஸன்யாஸம்பெற்று பரதனுடன் வனம் சென்றாள். பிறகு ராமன் அயோத்யாதிபதியாகப் பட்டாபிஷேகம் செய்யப்பட்டார். சத்ருக்னனுக்கு மதுராபுரியையும்; விபீஷணனுக்கு ராக்ஷஸத்வீபத்தையும்; ஸுக்ரீவனுக்கு வானரத்வீபத்தையும்; ஹனுமந்தனுக்கு ஸ்ரீபுரத்தையும்; விராதனுக்குப் பாதாளலங்கையையும்; நீலனுக்கு ஹனுபுரத்தையும்; பாமண்டலனுக்கு வைதாத்யம், ரதனபுரம் என்பவைகளையும் ராஜ்யங்களாக ஏற்படுத்தித், தன்னுடைய வனவாஸ காலத்தில் தனக்கு அதிக ஸஹாயம் செய்ததற்காக அவர்களிடத்தில் தனக்குள்ள நன்றியைத்தெரிவித்து, அவர்களை விசேஷ உபசாரங்களுடன் அவர்களுடைய ராஜ்யங்களுக்கு அனுப்பினார்.

ராமன் அயோத்யாதிபதியாய் அரசு செய்துவருங்காலத்தில் தனது பார்யைகளான, ஸீதை, ப்ரபாவதீ, ரதிப்ரபா, ஸ்ரீதாமா, என்பவர்களுடன் ஸுகமாய் வஸித்தார். லக்ஷ்மணனும் ராஜ்யகார்யங்களில ஸகல சம்பந்தத்தையும் விட்டு, விசல்யா, ரூபவதீ, வனமாலா, கலயாணமாலிகா, ரத்னமாலிகா, ஜிதபதமா, பாகயவதீ, மனோரமா என்ற எட்டு மஹிஷிகளுடனும், அவர்களுக்குப் பிறந்த இருநூற்றைம்பது குழந்தைகளுடனும் ஆநந்தமாயக் காலத்தைக் கழித்தார்.

ஸர்க்கம். 1.

வால்மீகி மஹர்ஷி, வேதங்களுடைய உண்மையான தாத்பர்யத்தை விவரிப்பதற்கு உத்தேசித்து, ஸ்நேஹிதனைப்போல உபதேசிக்கும் அர்த்தப்ரதானமான இதிஹாஸத்தையும், ப்ரியமான ஸ்த்ரீயைப்போல் ஹிதத்தைச்சொல்லும் வ்யங்க்யப்ரதானமான காவ்யத்தையும் முன்னிட்டுக்கொண்டு, காவ்யதோஷங்களைச் செவ்வையாய்த் தெரிந்தவராகையால, தான்செய்யும் க்ரந்தத்தில் வித்வான்களுக்குக் கௌரதை யுண்டாகும்பொருட்டு, ராமாயணத்தில் மஹாகாவ்யலக்ஷணங்கள் யாவும் அமைந்திருக்கின்றன என்றதை முதல் நான்கு ஸர்க்கங்களில் காட்டுகிறார். க்ரந்தத்தினுடைய விஷயமும் ப்ரயோஜனமும் முதலாவது ஸர்க்கத்தில தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

"குருவை நமஸ்கரித்து, அவருக்குச் சுச்ரூஷைசெய்து, ஸந்தேஹந்தீர விநயமாய்க் கேட்பதால், வேதாந்தார்த்தத்தைத் தெரிந்துகொள்" என்ற பகவத்கீதாவாக்யத்தாலும், சிஷ்யன்

குருவைக்கேட்டே தெரிந்துகொள்ளவேண்டியதென்றும், "கேட்காமல் ஒருவனுக்கும் சொல்லக்கூடாது" என்றும் தடுத்திருப்பதாலும், வால்மீகி, பகவத்ஸ்வருபத்தை கேள்விகளால் தெரிந்துகொண்டதாய்ச சொல்லப்பட்டிருக்கிறது.

தான் ஆரம்பித்த காவ்யமானது விக்னமில்லாமல் பூர்த்தியாவதற்கும், லோகத்தில் விருத்தியடைவதற்கும், தன்னுடைய குருவையும் இஷ்டதேவதையையும நமஸ்கரித்து, "ஆசார்யன் முகமாயத் தெரிந்துகொண்ட வித்யையே உயர்ந்தது," "நல்ல ஆசார்யனையடைந்த புருஷனே ப்ரஹ்மத்தையறிகிறான்" என்ற சுருதிகளின்படி, தன்னுடைய குருவிடத்தில ஆசார்ய லக்ஷணம் பூர்த்தியாயிருக்கிறதென்பதைத் தெரிவிக்கிறார்.

பக்கம் 1, வரி 4. த்ரேதாயுகத்தில்.

1 தருடி = $\frac{1}{33750}$ ஸெகண்டு.
100 தருடிகள = 1 தத்பரை = $\frac{2}{675}$ ஸெகண்ட.
33 தத்பரைகள் = 1 நிமேஷம் = $\frac{4}{45}$,,
18 நிமேஷங்கள் = 1 காஷ்டை = $1\frac{3}{5}$,,
30 காஷ்டைகள் = 1 கலை = 48 ,,
30 கலைகள = 1 கடிகை = அல்லது தண்டம்.
2 கடிகைகள் = 1 க்ஷணம் = மினிட் 48.
30 க்ஷணங்கள் = 1 திவஸம் அல்லது ஒரு நாள்.
365 நாள்களும, 15 தண்டங்களும், பலை 3.4-ம் = ஒரு வர்ஷம்.

யுகங்கள.	ஆதிஸந்தி.	யுகவர்ஷங்கள்.	அந்தஸந்தி.	மொத்தம்.	மஹாயுகம்.
கிருத	144,000	1,440,000	144,000	1,728,000	$\frac{4}{10}$
த்ரேதா	108,000	1,080,000	108,000	1.296,000	$\frac{3}{10}$
த்வாபர	. 72,000	720,000	72,000	. 864,000	$\frac{2}{10}$
கலி	36,000	360,000	36,000	432,000	$\frac{1}{10}$
மொத்தம் ...	360,0)0,	3,600,000	360,000	4,320,000	1

ஒரு மஹாயுகம் = கிருத + த்ரேதா + த்வாபர + கலி = 4,320,000 வர்ஷங்கள். 1. மன்வந்தரம் = 71 மஹாயுகங்கள்.